1286

1563

Approved by the Text-Book Committee, Madras

LAKSHMI VACHAKAM

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 SEP 1939
MADRAS

FIFTH BOOK

1615

V. Venkatarajulu Reddiar
(Junior Lecturer in Tamil, University of Madras.)

S. VASAN & Co.,
Samugarangapuram,
Tinnevelly.

Copy Right] **1938** **[Price As. 6.**

லக்ஷ்மி வாசகம்

1650
494.81186

ஐந்தாம் புஸ்தகம்

வே. வேங்கடராஜுலு ரெட்டியார்
(Junior Lecturer in Tamil, University of Madras.)
எழுதியது

S. வாஸன் கம்பெனி,
சமுகரங்கபுரம் : திருநெல்வேலி ஜில்லா

ரிஜிஸ்தர் செய்தது] 1938 [விலை அணா 6

Printed at the
'TAMIL KADAL' PRESS
130, Govindappa Naick Street,
G. T., MADRAS

முன்னுரை

'லக்ஷ்மி வாசகம்' என்னும் இவ்வரிசைப் புஸ்தகங்களில், மாணவர்கள் சாதாரணமாக அறியக்கூடிய விலங்கு, பறவை, தாவரம் இவற்றைக்குறித்தும், பொதுஅறிவைப்பற்றியும் பல பாடங்கள் எழுதப்பட்டுள்ளன; அன்றியும், நம் நாட்டுப் பெரியார்களின் வரலாறுகளும், தேசாபிமானத்தை உண்டுபண்ணும் பாடங்களும் அடங்கியிருக்கின்றன. இவையல்லாமல், நல்லொழுக்கத்தை உண்டாக்குங் கதைகளும் சரித்திரங்களும் எழுதப்பட்டிருக்கின்றன; இடையிடையே பாட்டுக்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

இப்புஸ்தகங்களில் ஒவ்வொருபாடத்தின்கீழ், அருஞ்சொற்களும், முக்கியமான கேள்விகளும் எழுதப்பட்டுள்ளன. 4, 5 - ஆம் புஸ்தகங்களில் அருஞ்சொற்களுக்குப் பொருளும் தரப்பட்டுள்ளன. உரைநடை, வகுப்பிற்கேற்றவாறு அமைந்துளது.

இவற்றால், இவ்வரிசைப் புஸ்தகங்களை முறையே கற்கும் மாணாக்கர், தேசாபிமானமும் நல்லொழுக்கமும் உடையவராதலோடு, தமிழ் மொழியிலும் நல்ல அறிவுடையவ ராவர்.

வே. வேங்கடராஜுலு.

உள்ளுறை

எண்	விஷயம்			பக்கம்
1.	இந்தியா	....	....	1
2.	இந்தியா (பாட்டு)	....	....	6
3.	கிராமநிலையும், சீர்திருத்தமும்		....	8
4.	இராமரும் பரதனும்	....	....	13
5.	விலங்கு முதலியவற்றின் தற்காப்பு		....	20
6.	பறவை வகை	....	....	26
7.	கன்னன் கொடை	....	....	30
8.	உணவுச்சத்து அல்லது, வைட்டமின்		....	36
9.	கூட்டுறவுச் சங்கம்	....	....	43
10.	நாம் எல்லாரும் குற்றவாளிகளே		....	47
11.	தொத்துநோய்	....	....	53
12.	பொங்கல்	....	....	59
13.	தாதாபாய் நௌரோஜி	....	....	63
14.	ஊர்திகள்	....	....	70
15.	வந்தேமாதரம் (பாட்டு)	....	....	81
16.	மாதவ கோவிந்த ரானடே		....	82
17.	சந்திரன்	....	....	87
18.	ஜவஹர்லால் நேரு	....	....	92
	புலியால் பிராமணன் மரண மடைந்த கதை			99
	குறுமுயல் சிங்கத்தைக் கொன்றது		....	100
	குமரேச சதகம்	....	....	102
	அறப்பளீசுர சதகம்	....	....	103
	திருவேங்கட சதகம்	....	....	104
	வாக்குண்டாம்	....	....	105
	நீதி வெண்பா	....	....	107

பண்டித ஜவஹர்லால் நேரு

லக்ஷ்மி வாசகம்

ஐந்தாம் புஸ்தகம்

---

1. இந்தியா

நாம் வாழும் நாட்டுக்கு, இக்காலத்தில், இந்தியா என்னும் பெயர் வழங்கிவருகின்றது. நம் முன்னோர், இத்தேசத்தைப் பரதகண்டம் என்று வழங்கினர். அஸ்தினபுரியில் அரசாண்ட சந்திர குலத்தரசர்களுள் பரதன் என்பவன், இத்தேசம் முழுவதையும் தன் கீழ்ப்படுத்தி, அரசாண்டு வந்தான். அதனால், இத்தேசத்திற்குப் பரதகண்டம் என்னும் பெயர் வந்தது. சக்கரவர்த்திகள் பன்னிருவருள் முதல்வராகிய பரதன் என்பவரின் பெயரால், இத்தேசத்திற்குப் பரதகண்டம் என்னும் பெயர்வந்தது என்று ஜைனர் கூறுவர்.

இந்தியாவிற்கு வடவெல்லையாக இமயம் என்னும் பெரிய மலை அமைந்துளது. மற்ற மூன்று பக்கங்களிலும் நீர் சூழ்ந்திருக்கின்றது. இந்தியாவிற்குக் கிழக்கிலுள்ள கடலுக்கு 'வங்காளக் குடாக்கடல்' என்றும், தெற்கில் இருக்குங் கட

லுக்கு 'இந்துமஹாசமுத்திரம்' என்றும், மேற்கில் இருக்குங் கடலுக்கு 'அரபிக்கடல்' என்றும் பெயர் வழங்குகின்றது.

இமயமலை, உலகத்திலுள்ள எல்லா மலைகளினும் மிக்க உயரம் உள்ளது. அதன் சிகரம் 29,000 அடி உயரம் உடையது. மிக்க உயரமாயிருத்தலின் அம் மலையின் மேலிடத்தில் பனி உறைந்திருக்கும். அதனால் அம்மலைக்கு ஹிமாசலம் என்று பெயர் வந்தது. ஹிமம் - பனி; அசலம் - மலை. ஆகலின், பனிமலை என்பது அதன் பொருள். பனி காட்சிக்கு வெண்மையாகத் தோன்றுமாகலின், அம் மலையை வெள்ளிமலை என்றும் கூறுவர். இமயமலை நமது தேசத்திற்குச் சிறந்ததோர் அரணாய் அமைந்து விளங்குகின்றது.

புண்ணிய நதி என்று இந்துக்கள் எல்லாரும் புகழ்ந்து பாராட்டுகின்ற கங்கையாறும், பன்னூறு மைல் தூரம் பாய்ந்து செல்கின்ற சிந்துநதியும் இமயமலையில்தான் உற்பத்தியாகி வருகின்றன. அயோத்தியிலிருந்து அரசாண்ட சூரியகுலத்தரசனாகிய பகீரதன் என்பவன், பெருமுயற்சி செய்து, கங்கையாற்றை, இந் நிலவுலகத்திற்குக் கொண்டு வந்தான். கங்கை, சிந்து, யமுனை முதலிய ஆறுகளால் வடஇந்தியா மிக்க செழிப்புள்ளதாய்த் திகழ்கின்றது.

விந்தியம் என்னும் பெருவரை, கிழக்கு மேற்காய், நீண்டு உயர்ந்து விளங்குகின்றது. அதன்

வடக்கிலுள்ள பூமிக்கு, முற்காலத்தில், ஆர்யாவர்த்தம் என்று பெயர் வழங்கிற்று. ஆர்யாவர்த்தத்தைப் 'புண்ணிய பூமி' என்று புகழ்ந்து கூறுவர். ஆர்யாவர்த்தத்தில் காசி, மதுரை, பிரயாகை (அலகபாத்), அயோத்தி முதலிய புண்ணிய ஸ்தலங்கள் பல உள்ளன.

விந்திய மலையின் தென்பால் உள்ள தேசங்களுள் திராவிட தேசம் பழமையானது. திராவிட தேசத்தில், தென்பாகத்தில், நமது தமிழ்நாடு விளங்குகின்றது. விந்திய மலைக்குத் தெற்கில் உள்ள ஆறுகளுள் கோதாவரி, கிருஷ்ணை, காவிரி என்னும் ஆறுகள் மிகச் சிறந்தவை. இவற்றைப் புண்ணியநதி என்று கொண்டாடுகின்றனர். மலைகளுள், ஸஹ்யபர்வதம் என்னும் மேற்குத் தொடர்ச்சிமலை மிக நீண்டு உயர்ந்துள்ளது; திருவேங்கடமலை மிக்க சிறப்புடையது.

இந்தியாவில், பொன் வெள்ளி முதலிய பல உலோகங்கள் அகப்படுகின்றன; பலவகைப் பயிர்கள் விளைகின்றன. இவற்றால், இந்தியா செழிப்பான தேசம் என்று பிற நாட்டவரும் கருதுகின்றனர்.

பரதகண்டத்தை ஆண்ட பெருவேந்தர்கள், பிற தேசங்களையும் வென்று, பெரும்புகழ் பெற்றனர். அவர்கள் ஐம்பத்தாறு தேசங்களை ஆட்சி செய்தனர் என்பர். ரகு மஹாராஜன் தேவலோகத்தையும் வென்றான் என்றும், தசரதர் விஜயன்

முதலிய வீரர்கள் தேவேந்திரனுக்குத் துணை நின்று, அவன்பகைவரை அழித்து, அவனரசினை நிலைநாட்டினர் என்றும் இதிஹாஸங்கள் கூறும்.

ஸ்ரீராமர் ஸ்ரீகிருஷ்ணர் முதலிய அவதார புருஷர்களுக்கும், புத்தர் வர்த்தமானர் முதலிய மதாசாரியர்களுக்கும், வியாசர் சுகர் முதலிய மஹரிஷிகளுக்கும் பிறப்பிடமாய்த் திகழ்ந்தது நம் இந்துதேசமே. அரிச்சந்திரன் முதலிய வாய்மையாளர்க்கும், கன்னன் முதலிய வள்ளல்களுக்கும், விஜயன் முதலிய வில்வீரருக்கும் தாயகம் ஆகியது நம் பரதகண்டமே.

நம்தேசத்தில், கபிலமஹரிஷிசிறந்த தத்துவ நூலை எழுதியுள்ளார். வியாசர் சிறந்த வேதாந்த நூலையும் புராணங்களையும் இயற்றி யிருக்கின்றார். திராவிட தேசத்தில் விளங்கிய ஸ்ரீசங்கராசாரியர், ஸ்ரீராமாநுஜர், மாத்வர் என்பவர் ஒவ்வொரு மதத்தை மேற்கொண்டு, அம் மதத்தை விளக்கி, விரிவான உரைகளும் நூல்களும் எழுதியுள்ளனர். பாணினிமஹரிஷி ஸம்ஸ்க்ருத பாஷைக்குச் சிறந்ததோர் இலக்கணம் செய்துள்ளார்; அகத்தியமுனிவர் தமிழ்மொழிக்குப் பெரிய இலக்கண நூல் இயற்றினார்.

நமது தென்னிந்தியாவில் கோயில்களும் தீர்த்தங்களும் பல உள்ளன. ஹிமாசலம்வரை போற்றப்படுகின்ற சேதுவும், உலகமெல்லாம் அறியுங் குமரித்தீர்த்தமும் நமது, தென்னாட்டில் திகழ்கின்

றன. இவை, நமது தென்னாட்டிற்கு, என்றும் அழியாத புகழினை நின்று நிலவச் செய்யும்.

இக்காலத்தில் விளங்கிய ஜகதீஸ சந்திர போஸ் என்பவர், தாவரங்களைப்பற்றி ஆராய்ந்து, சில உண்மைகளைக் கண்டறிந்தார். இன்றும், உயர்ந்த அறிஞர்களும், சிறந்த தேசாபிமானிகளும் திகழ்ந்து விளங்குகின்றனர். ரவீந்த்ரநாத தாகூர் சிறந்த புலவர். அவர், செய்யுட்களாலும் உரைநூல்களாலும் பெரும் புகழ் படைத்து, பரிசில் பெற்றவர். மஹாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு முதலியோர் சிறந்த தேசாபிமானிகள். மஹாத்மா காந்தியின் புகழ் உலகமெங்கும் பரவியுளது. இவ்வாறே, இந்தியா, தன் புகழை நாற்றிசையிலும் பரப்பி, எந்நாளும் இலங்குவதாகுக.

அருஞ்சொற் பொருள் :

அரண் - மதில்.
பெருவரை - பெரியமலை.
பெருவேந்தர் - சக்கரவர்த்திகள்.
அவதாரபுருஷர் - மேலுலகத்திலிருந்து இறங்கிப் பூமியில்வந்து பிறப்பவர்; தெய்வத்தன்மை உள்ளவர்.
வள்ளல்-இல்லை என்று சொல்லாமல் கொடுப்பவர்கள்.
என்றும் - எந்நாளும்.
நிலவ - விளங்க.
இலங்குவது - விளங்குவது.
நிலஉலகம் - பூமி.
தென்பால் - தெற்கு.
இதிகாசங்கள் - ராமாயணம், மஹாபாரதம்.
திகழ்ந்தது - விளங்கியது.
வாய்மையாளர் - உண்மை சொல்பவர்.
தாயகம் - பிறப்பிடம்.
தத்துவநூல் - உண்மைப் பொருள்களைப்பற்றிக் கூறும் சாஸ்திரம்.
உரைநூல் - வசனபுஸ்தகம்.

கேள்விகள் :

1. பரதகண்டம் என்று எதற்குப் பெயர்? என்?
2. ஹிமாசலம் என்பதன் பொருள் என்ன? அந்த மலைக்கு வேறு என்ன பெயர் வழங்கும்?
3. ஆர்யா வர்த்தம் என்பது எது?
4. வியாசர், அகஸ்தியர் இவர்களைப்பற்றிக் கூறுக.

---

2 இந்தியா (பாட்டு)

பூமிதனில் ஆதிமுதல் புகழ்படைத்த தேசம்
புண்ணியஞ்சேர் கங்கைநதி புனல்பரவு தேசம்
ஏமமுறும் இமயம்வட எல்லையுள தேசம்
இந்தியா எனுந்தேசம் எம்தேசம் அம்மே. (1)

வேதமும்பல் சாத்திரமும் விளங்குகிற தேசம்
மெய்யுணர்வின் நிலைகண்டோர் மேவியுறை தேசம்
ஏதமிலாப் பலமதமும் இசைகொண்ட தேசம்
இந்தியா எனுந்தேசம் எம்தேசம் அம்மே. (2)

சிந்துமுதல் பலநதியால் செழிப்புடைய தேசம்
சேதுவொடு குமரியெனுந் தீர்த்தமுள தேசம்
இந்திரற்கும் துணையாய இறையவர்தம் தேசம்
இந்தியா எனுந்தேசம் எம்தேசம் அம்மே. (3)

தங்கமொடு பிறபொன்னுந் தருகின்ற தேசம்
சகலவிதப் பயிர்களெலாந் தழைக்கின்ற தேசம்
எங்குந்தன் புகழ்பரப்பி ஏற்றமுறுந் தேசம்
இந்தியா எனுந்தேசம் எம்தேசம் அம்மே. (4)

கன்னன்முதல் பலர்கொடையால் காத்தளித்த தேசம்
காளிதாசன் கம்பன்இவர் கவிபடைத்த தேசம்
இன்னல்தவிர் காந்திமகான் இசைபரவு தேசம்
இந்தியா எனுந்தேசம் எம்தேசம் அம்மே. (5)

வீரருக்குத் தாயகமாய் வீறுபெறு தேசம்
மெய்ம்மைக்கோர் உறைவிடமாய் விளங்குகிற தேசம்
ஏர்வளமும் கலைவளமும் இணையில்லாத் தேசம்
இந்தியா எனுந்தேசம் எம்தேசம் அம்மே. (6)

அருஞ்சொற் பொருள்:

புனல் - வெள்ளம்.
மெய்உணர்வு - உண்மையறிவு; தத்துவ ஞானம்.
இசை - புகழ்.
கவிபடைத்த - பாட்டுக்களை உடைய.
உறைவிடம் - இருப்பிடம்.
கலை - சாஸ்திரம்.
ஏமம் உறும் - காவலாக வுள்ள.
மேவி - விரும்பி.
ஏதம் - குற்றம்.
பிற பொன் - மற்ற உலோகங்கள்.
வீறு - மேலானநிலை.
ஏர் வளம் - வியவசாயத்தின் மிகுதி.

3. கிராமநிலையும், சீர்திருத்தமும்

ஒரு வீட்டிற்குக் கடைகால் ஆதாரமாயிருப்பது போல, ஒரு தேசத்திற்குக் கிராமங்கள் ஆதாரமாயிருக்கின்றன. கிராமங்கள் செழிப்பாயிருந்தால்தான், தேசம் செல்வமுடையதாகும். ஆகலின், கிராமங்களின் நன்மையைக்குறித்து நாம் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

கிராமங்களில் வாழ்ந்தவர்களுட் பலர், கல்வி கற்று, நகரங்களில் உத்தியோகஞ் செய்கின்றனர்; சிலர், நகரங்களில் வாணிகம் முதலியன செய்து, அங்கேயே வாழ்கின்றனர். ஏழைகள் கூலிவேலை செய்து பிழைக்கலாம் என்று எண்ணி, நகரங்களுக்குச் செல்கின்றனர். இவற்ருல், கிராமவாசிகளின் தொகை குறைந்துகொண்டே வருகின்றது. சில கிராமங்களில் பல வீடுகள் பாழ்பட்டுக் கிடக்கின்றன.

இப்பொழுது, மிராசுதார்கள் சிலரும் தொழிலாளிகள் சிலருமே பெரும்பாலும் கிராமங்களில் வசிக்கிருர்கள். மிராசுதார்கள் தமக்குள்ள பூர்வ சொத்துக்களால் காலங்கழிக்கிருர்கள். அவர்கள் முயற்சியோடு தொழில் நடத்துவதில்லை. அன்றியும், தங்களுக்குள் கக்ஷியை ஏற்படுத்திக்கொண்டு, வழக்குத் தொடர்ந்து வீண்செலவு செய்கின்றனர். அவர்கள் கிராமப் பொது நன்மைக்குச் செலவு செய்ய மனங்கொள்ளுவதில்லை. கிராமவாசிகள், அற்ப வழக்குக்களுக்காகவும் நியாய

ஸ்தலங்களுக்குச் செல்கின்றனர்; சிறிய கலகத்தைப் பெரியதாக்கி, அதற்காக அதிகப் பணம் செலவு செய்கின்றனர். சிலர், தம் மக்களின் கல்விக்காக நிலம் முதலியன விற்று வறியர் ஆகின்றனர். இவற்ருல், கிராமங்கள், வளங் குறைந்து, சீர்கெட்டு, வறுமை அடைகின்றன.

முற்காலத்தில், கிராமவாசிகள் குறைவின்றி வாழ்ந்துவந்தார்கள். அக்காலத்தில் அவர்கள் சாதாரண வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர்; நாகரிக வாழ்க்கையில் விருப்பம் கொண்டிலர். அதனல், அவர்கள் வாழ்க்கைக்கு அங்குக் கிடைக்கும் பொருள்களே போதியனவா யிருந்தன. இக்காலத்தில், கிராமங்களிலும் நாகரிக வாழ்க்கை நடையாடுகின்றது. அதனல், பலவகையான பொருள்கள் அங்கு ஆவசியகம் ஆகின்றன.

சில ஊர்களில் பாடசாலைகள் இல்லை. கிராமத்தில் இருப்பவர்களுள் பெரும்பாலார் கல்வியறிவு இல்லாதவர்களா யிருக்கின்றனர். அவர்களுக்குச் சுகாதாரவழி தெரியாது. அவர்கள் நீர்நிலைகளையும் பொதுவிடங்களையும் அசுத்தம் செய்கின்றனர்; அவற்ருல் உண்டாகுங் கொடிய நோய்கள் தேவதையால் வருகின்றவை என்று தவருகக் கருதுகின்றனர்.

கிராமத்தில், தொழிற்சாலைகள் இல்லை. உழவுத்தொழில் முதலியவற்றிற்கு வேண்டும் பணமும் குறைந்த வட்டிக்குக் கிடைப்பதில்லை. குடிகள்

அதிக வட்டிக்குக் கடன் வாங்குகின்றூர்கள். இவை போன்ற பல காரணங்களால், கிராமவாசிகள், வறியராயும் பிணியாளராயும் கடன்காரராயும் அல்லல் உறுகின்றனர். இனி, இவற்றைப் போக்குதற்கு உரிய வழிகள் எவை என்று ஆராய்வோம்:

கிராமங்களில் பஞ்சாயத்துச் சபை ஏற்படுத்த வேண்டும். கிராமங்களில் ஏற்படுஞ் சிறு கலகங்களையும், சண்டை சச்சரவுகளையும், வழக்குக்களையும் பஞ்சாயத்தார் கவனித்து முடிவு செய்யவேண்டும். அரசாங்கத்தார், சில கிராமங்களில் பஞ்சாயத்து ஏற்படுத்தியிருக்கிறூர்கள். அவ்வாறே எல்லா ஊர்களிலும் ஏற்படுத்துதல் நல்லது.

எல்லா ஊர்களிலும் பாடசாலைகளை ஏற்படுத்துதல் ஆவசியகம். வயது ஆன பெரியவர்களுக்கு இராப்பாடசாலைகளை அமைத்து, அவர்களுக்குக் கல்வியில் விருப்பத்தை உண்டாக்க வேண்டும். வாசகசாலைகளை ஏற்படுத்துதல் வேண்டும். அவற்றில் நல்ல புஸ்தகங்களைச் சேகரித்துவைக்க வேண்டும். வர்த்தமானப் பத்திரிகைகளை வருவிக்க வேண்டும். அங்கு வந்து வாசிக்கும்படி, ஊராருக்கு ஆசையை உண்டுபண்ண வேண்டும்.

கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தி, எல்லாரையும் அதில் அங்கத்தினராகச் சேர்க்க வேண்டும். அவர்களுக்குக் குறைந்த வட்டியில் கடன்கொடுத்து உதவ வேண்டும்.

கிராமங்களில் வைத்தியசாலை அமைப்பதோடு, வீடுகளையும் தெருக்களையும் சுத்தமாக வைத்திருக்கும்படி போதிக்க வேண்டும். இவைகளை முக்கியமாக அரசாங்கத்தார் கவனித்தல் வேண்டும். ஆயினும், கிராமவாசிகளும் இவற்றில் நாட்டம் கொள்ளுதல் வேண்டும். தெருக்களிலும் பொதுவிடங்களிலும் அசுத்தம் செய்தல் கூடாது. நீர்நிலைகளைச் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். பொதுஜன நன்மையை ஒவ்வொருவரும் கருதவேண்டும்.

வடமலையாள தேசத்தில், பெரியோர் பலர் கூடி, ஒரு சங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அச்சங்கத்தார், சில கிராமங்களில் பாடசாலையை ஏற்படுத்தி நடத்திவருகிறார்கள்; சிறுவர்கள் உழவுத் தொழில் முறைகளை அங்கு நேரிற் கண்டு படிப்பதற்கு, ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நெசவுத் தொழிலைக் கற்பிக்கவும் பாடசாலையை ஏற்படுத்தியுள்ளார்கள். நெசவுத் தொழிலாளிகளுக்குப் பண உதவி செய்வதற்காகக் கூட்டுறவுச் சங்கம் வைத்திருக்கின்றனர்; வாசகசாலை அமைத்திருக்கின்றனர். ஆதிதிராவிடச் சிறுவர்களை நன்னெறியிற் பழக்குதற்பொருட்டுத் தனியிடத்தில் பாடசாலை அமைத்திருக்கின்றனர். இவ்வாறு பல வழிகளில், கிராமங்களைச் சீர்திருத்தி முன்னிலைக்குக் கொண்டுவருகின்றனர். அதுபோல, நமது நாட்டிலும் பெரியோர்கள், ஆங்காங்குச் சங்கம் ஏற்படுத்தி, கிராமங்களைச் சீர்திருத்தி, உயர்நிலைக்குக் கொண்டு வருவார்களாக.

சில ஆண்டுகட்கு முன், மைசூர் அரசாங்கத் கத்தார், 'லலிதாத்திரிபுரம்' என்னும் ஊர் ஒன்று அமைத்திருக்கின்றனர். அவ்வூரில், பல ஜாதியாருக்கும் தனித்தனியே தெருக்கள் உண்டு. தெருக்களெல்லாம் அகலமாய் இருக்கின்றன. வீடுகளும் விசாலமாய் இருக்கின்றன. வீடுகளுக்கு முன்னும் பின்னும் வெளியிடம் உளது. ஒரு வீட்டுக்கும் மற்றொரு வீட்டுக்கும் இடையே பத்துக் கஜம் இடைவெளி விடப்பட்டிருக்கின்றது. வீடுகள் கட்டுதற்கு நிலத்தை அரசாங்கத்தார் இனுமாகக் கொடுத்திருக்கின்றனர். அவ்வூரில், இரண்டு பாடசாலைகள் இருக்கின்றன. அவற்றில் கைத்தொழிலும், உழவுத் தொழிலுக்கு வேண்டிய பயிற்சியும் கற்பிக்கிறார்கள். அங்குக் கூட்டுறவுச் சங்கமும், பஞ்சாயத்துச் சபையும், வாசக சாலையும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு எல்லா நலங்களும் அமையப்பெற்ற கிராமங்களை, நமது தேசத்திலும் அரசாங்கத்தார் ஏற்படுத்துதல் நல்லது.

அருஞ்சொற் பொருள் :

கடைகால் - தரைக்குள் இருக்கும் சுவரின் அடிப் பகுதி; வாணம்.

ஆவசியகம் - இல்லாமல் முடியாதவை.

கக்ஷி - பிரிவு.

மக்கள் - மனிதர்.

வறியர் - ஏழைகள்.

போதியன - போதுமானவை.

அல்லல் - துன்பம்.
வர்த்தமானம் - செய்தி.
நாட்டங்கொள்ளுதல் - கவனஞ் செலுத்துதல்.
பஞ்சாயத்து - ஐவர் கூடிய சபை; இப்போது எழுவருக்கு அதிகமாயும் இருப்பது உண்டு.

கேள்விகள் :

1. கிராமத்தில் ஜனத்தொகை குறைவதற்குக் காரணம் என்ன?
2. கிராமத்தவர் ஏழைகளாதற்கு என்ன காரணம்?
3. கிராமத்தவருக்குக் கல்வியறிவை உண்டாக்க என்னசெய்யவேண்டும்?
4. லலிதாத்திரிபுரம் எங்கிருக்கிறது? அதைப்பற்றித் தெரிந்தவற்றைச் சொல்லுக.

4. இராமரும் பரதனும்

I

முற்காலத்தில் அயோத்திநகரில், தசரதர் என்னுஞ் சக்கரவர்த்தி வாழ்ந்திருந்தார். அவருக்குத் தேவியர் மூவர். அவர்கள் கௌசலை, கைகேயி, சுமித்திரை என்னும் பெயரினர். கௌசலைக்கு இராமர் என்னுஞ் சேயும், கைகேயிக்குப் பரதன் என்னும் புதல்வனும், சுமித்திரைக்கு இலக்குவன், சத்துருக்கன் என்னும் இருவர் குமாரரும் இருந்தனர்.

இராமருக்கு இளமைப்பருவம் நிகழ்ந்தபோது, தசரதர் அவருக்கு முடி சூட்டக் கருதினர்; அதனை அமைச்சரிடம் கூறி, ஆலோசனை செய்தார்; பின்பு, முடிசூட்டுதற்கு நன்னாள் குறிப்பிட்டு, அச் செய்தியை நகரத்தில் பறைசாற்றி, அறிவிக்கச் செய்தார். இராமருக்கு முடிசூட்டும் விழாவினை அறிந்த நகரமாந்தர், உவந்தனர்; தெருக்களையும் வீடுகளையும் அலங்காரஞ் செய்வாராயினர்.

இச் செய்தியை, கைகேசியின் தாதியாகிய மந்தரை என்பவள் அறிந்தாள். அவளுக்கு இராமர்மேல் பகை உண்டு. அதனால் அவள், இராமருக்கு முடி சூட்டுவதைத் தவிர்க்க எண்ணினாள். உடனே, தன் தலைவியாகிய கைகேயியிடஞ் சென்று, அச் செய்தியைத் தெரிவித்து, பலசூழ்ச்சியுரைகளால், அவள் மனத்தைக் கலைத்தாள். பின்னர், மந்தரை, பரதனுக்கு முடி சூட்டுதற்கும், இராமனைக் காட்டுக்கு அனுப்புதற்கும் தக்க உபாயத்தை அறிவித்தாள். கைகேயி அவ்வாறே செய்வதாக உறுதி கூறினாள். மந்தரை, தன் கருத்து நிறைவேறியதற்கு மகிழ்ந்து சென்றாள்.

அன்று இரவில், தசரதர் கைகேசியின் கோயிலுக்குச் சென்றார். அப்போது, கைகேயி வருத்தமுற்றுத் தரைமேற் படுத்திருந்தாள். அதனைக் கண்ட தசரதர், கைகேசியை நோக்கி 'ஏன் இவ்வாறு வருந்துகின்றாய்? உனக்கு வேண்டுவது யாது? அதனைக் கூறு. உன் விருப்பத்தை இப்

பொழுதே நிறைவேற்றுகின்றேன்' என்று, வேண்டினர். உடனே கைகேயி, 'தாங்கள் முன்னமே எனக்குத் தருவதாகச் சொல்லிய வரம் இரண்டும் இப்போது தரல்வேண்டும். அவற்றுள் ஒரு வரம் பரதனுக்கு முடி சூட்டுவது; மற்றொரு வரம் இராமனைப் பதினன்கு வருடம் காட்டுக்கு அனுப்புவது' என்று இயம்பினள். இராமனைக் காட்டுக்கு அனுப்பவேண்டும் என்ற சொல்லைக் கேட்டதும், தசரதர் ஒன்றுந் தோன்ருமல், சிறிது நேரம் திகைத்து நின்ருர். பின்னர், தேறி, கைகேசியைப் பார்த்து, 'உன் மகனுக்கு முடிசூட்ட வரம் தருகின்றேன். இராமன் காட்டுக்குப் போவானுனல், அத் துன்பத்தை என்னல் பொறுக்க முடியாது; என் உயிர் நீங்கிவிடும். ஆதலின், இராமன் இங்கே இருக்கும்படி எனக்கு வரம் தா' என்று வணக்கமாக வேண்டினர். கைகேயி, 'நான் வேண்டிய வரங்களைத் தாராவிடின், இப்போதே என் உயிரை விட்டுவிடுவேன்' என்று உறுதி கூறினள். அது கேட்ட தசரதர், தமது வாய்மை தவறுதற்கு அஞ்சி, 'நீ வேண்டிய வரங்களை ஈந்தேன், ஈந்தேன்; நானும் இதோ மாய்ந்தேன், மாய்ந்தேன்' என்று கூறி, மூர்ச்சையுற்றுக் கீழே சாய்ந்தார்.

மறுநாட் காலையில், இராமனுக்கு முடிசூட்டுதற்காக, வசிட்டரும் அமைச்சரும் அரசன் கொலு மண்டபத்தை அடைந்தனர். அப்பொழுது கைகேயி, இராமனை அழைத்துவருமாறு சுமந்திரன் என்னும் மந்திரியை அனுப்பினள். இராமர், சுமந்

திரன் கூறியதைக் கேட்டவுடனே புறப்பட்டு, தம் தந்தையார் இருக்கும் அரண்மனையை நோக்கிச் சென்றார். அங்கே கைகேசியைக் கண்டார்; கண்டதும், அவளை அன்புடன் வணங்கி, கைகட்டி, வாய்பொத்தி நின்றார். கைகேயி அவரை நோக்கி, 'இராமா, உன் தந்தையார் ஒரு கட்டளை இட்டிருக்கின்றார். அது, நீ பதினான்கு வருடம் காட்டில்வாழ வேண்டும்; பரதன் முடிசூடி நாட்டை ஆளவேண்டும் என்பது' என்று, இரக்கமின்றி இயம்பினாள்.

கைகேயி கூறியதைக் கேட்ட இராமர் மன மகிழ்ந்து, முகமலர்ந்து, 'தாயே இதனினும் எனக்கு நன்மை யாது உளது? காட்டில் முனிவர்களைத் தரிசித்து, தவம்புரிந்து, நன்மை பெறுதற்கு நான் என்ன புண்ணியஞ் செய்தேனோ, அறிகிலேன். நாட்டைப்பரதன் ஆண்டால் என்ன, நான்ஆண்டால் என்ன? என் தம்பி பெற்ற செல்வம் நான் பெற்ற செல்வமே. இப்பொழுதே நான் காட்டுக்குச் செல்லுகிறேன். விடைதாரும்' என்று வணங்கி, விடைபெற்று மீண்டார்.

இராமர் காட்டுக்குச் செல்லலானார். அவரோடு சீதையும் இலக்குவனும் புறப்பட்டனர். அதனைக் கண்டு நகரமாந்தர் மிக வருந்தினர். இராமர் முதலியோர் காட்டிற்குச் சென்று, சித்திரகூடம் என்னும் மலையில் தங்கியிருந்தனர்.

II

இராமர் காடு சென்றார் என்ற செய்தியை அறிந்த தசரதர் உயிர் நீத்தார். பின்பு, தன் பாட்

டன் நகரில் இருந்த பரதனை அழைத்து வருமாறு, வசிட்டர், ஏவலரை விடுத்தார். உடனே, பரதன் சத்துருக்கனோடு புறப்பட்டு அயோத்தியை அடைந் தான். நகரம் ஆரவாரம் இன்றி அடங்கி யிருப்ப தைக் கண்டு, 'என்ன தீங்கு நேர்ந்துளதோ?' என்று எண்ணி வருந்தினன்; விரைவிற் சென்று அரண்மனையை அடைந்து, தந்தையைக் காண நடந்தான். அப்பொழுது கைகேயி பரதனை அழைப்பித்தாள். பரதன் சென்று தாயை வணங்கி, 'தந்தையார் எங்கிருக்கிறார்?' என்று வினவினன். கைகேயி, 'உன் தந்தையார் வானுல கம் சென்று விட்டார். வருந்தாதே' என்றாள். அதனைக் கேட்டதும் பரதன், 'ஓ' என்று அலறி, கீழே விழுந்து அழுதான்; பின்னர் எழுந்து, 'அவர் இறந்ததன் காரணம் என்ன?' என்று கேட்டான். கைகேயி, 'அப்பா, உன் தந்தையார் இராமனுக்கு முடிசூட்ட ஏற்பாடு செய்தார். நான் உனக்கே முடிசூட்ட வேண்டும் என்று வேண்டினேன். அதற்கு மனம் இன்றி, வருந்தி உயிர் நீத்தார்' என்றாள். பின்பு, பரதன், 'என் தமையனார் எங்கே இருக்கின்றார்? அவரைக் கண்டால்தான் என் துன்பம் தீரும். அவர் இருக்குமிடத்தைத் தெரிவி' என்று வேண்டினன். உடனே கைகேயி, 'இராம னைக் காட்டுக்குப் போக்கிவிட்டேன்; நீ கவலை யின்றி முடிசூடி அரசாட்சி செய்' என்று உவப் பொடு கூறினள்.

இராமன் காட்டுக்குப் போன செய்தியை அறிந்ததும், பரதன் துணுக்குற்றுக் கீழே வீழ்ந்தான்; புரண்டான்; அழுதான்; அரற்றினான்; பின்பு கைகேசியைப் பலவாறு இகழ்ந்து கூறினான்; 'பாவி, நீ, என் தந்தையைக் கொன்றாய்; தமையனைக் காட்டுக்கு அனுப்பினாய். என் அண்ணனுக்கு உரிய அரசாட்சியை யான் ஏற்பேனோ? உன் அறியாமை என்னே!' என்று வெறுத்துரைத்தான்.

பின்பு, தசரதருக்குச் செய்ய வேண்டிய கருமங்கள் நிறைவேறின. அதன்பின், வசிட்டர் அமைச்சர் முதலியோர் பரதனைக் கண்டு, 'உம் தந்தையார் உமக்குக் கொடுத்த வரத்தின்படி நீர் முடிசூடி அரசாளவேண்டும்' என்று வேண்டினர். அவர்களை நோக்கிப் பரதன், 'நீங்கள் சொல்வது நியாயம் அன்று. அரசு என் அண்ணனுக்கே உரியது. என் தாய் செய்தது தவறு. நான் இப்பொழுதே போய், என் அண்ணனை அழைத்து வந்து முடிசூட்டுவேன்' என்று புறப்பட்டான். வசிட்டர் முதலியோரும் நகரமாந்தரும் பரதனோடு சென்றனர். அனைவரும் சென்று இராமரைக் கண்டனர். அவரைக் கண்டதும், பரதன் அவரடிகளில் வீழ்ந்து புலம்பினான். தசரதர் இறந்ததை அறிந்து, இராமர் முதலியோர் வருந்தி அழுதனர்.

பரதன், இராமரை நோக்கி, 'ஐய, தாம் அயோத்திக்கு வந்து முடிசூடி அரசாளவேண்

டும்' என்று வேண்டினன். இராமர், 'தம்பி, நாம் தந்தையார் கட்டளையை மீறலாகாது. நான் பதினான்கு வருடம் காட்டிலிருந்துவிட்டு, பின்பு வருகிறேன். நீ முடிசூடி அரசாட்சி செய்' என்றார். அதற்குப் பரதன், 'நான் நகரத்திற்குச் செல்லமாட்டேன்; உம்மோடு இங்கே இருந்து உமக்குத் தொண்டு செய்வேன்' என்றான். இராமர் அதற்கு இணங்கவில்லை. அதனால், பரதன் இராமரை நோக்கி, 'தாம் வருமளவும் நான் நகரத்தின் அருகில் தவஞ் செய்துகொண்டிருப்பேன். தாம் குறித்த நாளில் வாராவிடின், யான் எரியில் வீழ்ந்து இறப்பேன். உம்முடைய பாதுகைகளை நல்கும்' என்று கூறினன். பின்பு, பரதன் பாதுகைகளைப் பெற்று மீண்டு, இராமர் அயோத்திக்கு வரும்வரையும், தவஞ் செய்துகொண் டிருந்தான்.

'பரதனையும் இராமனையும் பார்.'

அருஞ்சொற் பொருள் :

தேவியர் - பட்டத்து ராணிகள்.
அமைச்சர் - மந்திரிகள்.
தவிர்க்க - நீக்க.
கோயில் - அரண்மனை.
இயம்பினாள் - சொன்னாள்.
ஈந்தேன் - தந்தேன்.
மாந்தர் - மனிதர்.
போக்கி - விடுத்து.
சேய் - மகன்.
புதல்வன் - மகன்.
உவந்தனர் - மகிழ்ந்தனர்.
சூழ்ச்சியுரை - வஞ்சனைச் சொல்.
தேறி - தெளிந்து.
தரிசித்து - கண்டு.
வானுலகம் - தேவலோகம்.
துணுக்குற்று - நடுங்கி.

அரற்றினன் - வாய்விட்டு அழுதான்.
எரி - தீ.
என்னே - என்ன ஆச்சரியம்.
பாதுகை - மர அடி; பாத ரக்ஷை.

கேள்விகள் :

1. மந்தரை என்பவள் யாவள்? அவள் என்ன செய்தாள்?
2. கைகேயி கூறியதைக் கேட்ட இராமர் என்ன சொன்னார்?
3. வசிட்டர் முதலியோர் பரதனை நோக்கி என்ன சொன்னார்கள்? அதற்குப் பரதன் என்ன கூறினன்?
4. பரதன் இராமரிடம் கடைசியில் கூறியவை யாவை?

5. விலங்கு முதலியவற்றின் தற்காப்பு

நாம், பகைவரினின்று நம்மைக் காத்துக்கொள்ளு தற்கும், பகைவரை அழித்தற்கும், பலவகைக் கருவிகளைக் கைக்கொள்கின்றோம். முற்காலத்தில், மனிதர்கள், வேல் வாள் ஈட்டி சக்கரம் அம்பு முதலியவற்றை ஆயுதங்களாகக் கொண்டிருந்தனர்; இக்காலத்தில், துப்பாக்கி பீரங்கி இவையேயன்றி, நெருப்புருண்டைகளையும் விஷவாயுவையும்

கைக்கொண்டுள்ளனர். அன்றியும், வானிற் பறக்கும் விமானங்களும், கடல்நீரினுள் மூழ்கிச்செல்லுங் கப்பல்களும் உள்ளன. இன்னும், புதிய புதிய பொறிகளையும் கருவிகளையும், கண்டு பிடிப்பதில் கருத்துடையவராய் இருக்கின்றனர்.

நம்மைப்போலவே, விலங்கு பறவை முதலியவையும் சத்துருக்களினின்று தம்மைக் காத்துக் கொள்ள வேண்டுமல்லவா? அவைகள் வேறு கருவிகளைச் செய்துகொள்ளும் அறிவுடையன அல்ல. ஆகலின், அவற்றிற்கு இயல்பாகவே சில உறுப்புக்கள் கருவிகளாக அமைந்துள்ளன. அவை எவை என்று இங்கு நோக்குவோம்:

கொம்பு:—சில விலங்குகளுக்கு வலிமையான கொம்புகள் உள்ளன. எருது, மான், யானை, கல்யானை, காட்டுப்பன்றி முதலியவற்றின் கொம்புகளைக் கவனியுங்கள். மனிதரோடு அதிகம் பழகாத எருதுகள், தம்மைப் பற்றுதற்கு வருபவரைக் குத்தித் தள்ளி வீழ்த்திவிடும். யானையின் கொம்புகள் நீண்டு வலியனவா யிருக்கும். அவற்றால் அது, புலி முதலியவற்றையும் தாக்கும். கல்யானைக்குக் கொம்பு மூக்கினின்று முளைத்திருக்கும். அஃது இரண்டடி நீளமிருப்பினும் திண்ணியதாகலின், அதனால் கல்யானை, தன் சத்துருக்களை வீழ்த்திவிடும். காட்டுப்பன்றிக்கு வாயிலுள்ள கோரப் பற்கள் கொம்புபோல் உதவுகின்றன. அவற்றால் அது, புலியையும் தாக்கிப் பிளந்துவிடும். இவ்வாறு,

பல விலங்குகள் கொம்புகளால் தங்களைக் காத்துக் கொள்கின்றன; பகைவரையும் அழிக்கின்றன.

பல்:—தங்களைக் காத்துக் கொள்ளுதற்கும், இரையைப் பற்றுதற்கும் பற்களை உபயோகிக்கும் விலங்குகள் பல உள்ளன. பூனை, நாய், நரி முதலியவை பற்களால் இரையைப் பற்றுகின்றன. பூனை, நாய் முதலியவை தங்களைக் காத்துக்கொள்ளுதற்காக மனிதரைக் கடிப்பது உங்களுக்குத் தெரியுமன்றோ? 'புல்டாக்' என்னும் நாய் கடித்தால், அதினின்று விடுவித்துக் கொள்ளுதல் மிக அரிது.

வால்:—சில விலங்குகள் தங்களைக் காத்துக் கொள்ளுதற்கு வாலை உபயோகித்தல் உண்டு. பசு, குதிரை முதலியவை, தம்மேல் வீழ்ந்து துன்புறுத்தும் ஈ, கொசுகு முதலியவற்றை வாலால் ஓட்டிக் கொள்கின்றன. தேள், தன் கொடுக்கினால் நம்மைக் கொட்டி வருத்துதலை நீங்கள் அறிவீர்கள். மீன்கள் நீந்துதற்கேயன்றி, தம் சத்துருவைத் தாக்குதற்கும் வாலை உபயோகிக்கும். திமிங்கிலம் வாலால் மோதின், படகுகள் சிதறுண்டு போகும்; கப்பலும் கவிழ்ந்து விடுதல் உண்டு. அதன் வாலின் வன்மை என்னே!

பிற உறுப்புக்கள்:—முள்ளம் பன்றி என்னும் ஒருவகைப் பன்றி உளது. அதன் உடலின்மேல், அம்புபோன்ற முட்கள் உள. அதனால், முள்ளம் பன்றி அம்புப்புட்டில்போல் இருக்கின்றது என்று

புலவர் வருணித்திருக்கின்றனர். முள்ளம் பன்றி, தன் உடம்பிலுள்ள முட்களால் தன்னைக் காத்துக்கொள்கிறது. ஆமை, தன் முதுகின்மேல் உள்ள ஓட்டையே தனக்குப் பாதுகாப்பிடமாகக் கொள்கின்றது. அது, தனக்குப் பகையினால் துன்பம் நேரும் என அறிந்தால், உடனே தலையையும் கால்களையும் அந்த ஓட்டினுள் ஒடுக்கி அடக்கிக் கொள்ளும். ஆமையின் ஓடு கனமானதாயிருத்தலால், அதனைத் தாக்கினாலும், ஆமைக்குத் துன்பம் நேராது.

விஷம் :— தேனீ, கடந்தை முதலியவை மனிதரைத் தாக்கித் துன்புறுத்தும். அவை, மனிதர் தேனை எடுக்க வருகிறார்கள் என்றும், தங்களை அழிக்க வருகின்றனர் என்றும் கருதி, அருகில் வருபவரைக் குத்தி வருத்துகின்றன. அவை குத்தினால், அவ்விடம் வீங்கிவிடும்; வலி உண்டாகும். அதற்குக் காரணம் அவற்றின் விஷநீரேயாகும். கடந்தையின் தாக்குதலால் சில மனிதர் மரணமடைந்திருக்கின்றனர். பசு, எருது முதலியனவும் இறந்திருக்கின்றன! தேனீக்கள், தங்கள் அருகில் வந்த மனிதர், தங்களுக்குத் தீங்கு செய்யமாட்டார் என அறிந்தால், அவர்களை ஒன்றுமே செய்வதில்லையாம்.

பாம்புகளுள் பலவற்றிற்கு விஷம் உளது. நல்லபாம்பு, விரியன் பாம்பு முதலியவற்றிற்கு நஞ்சு அதிகம் உண்டு. பாம்புக்குப் பல்லினுள் தொளை உளது. பல்லின் மேலிடத்தில் விஷநீர்ப்

பை இருக்கின்றது. அதனால், பாம்பு கடிக்கும் போது, அவ் விஷநீர் பல்லின் வழியே வந்து, கடியுண்டவரின் உடம்பினுள் இரத்தத்தில் கலக்கின்றது. பாம்புகள், தம் பாதுகாப்பிற்காகவே, அருகில் வரும் பிராணிகளைக் கடிக்கின்றன. முட்டையிட்டிருக்கும் பாம்புகள், தம் முட்டைகட்குத் தீங்கு செய்வார்கள் என்று கருதி, அருகில் வரும் மனிதர்களைச் சீறிக் கடிக்கும். பாம்புகளுக்குத் தீங்கு செய்யாவிட்டால் அவை கடிக்க மாட்டா. சிலர் பாம்புகளுக்கு இரை கொடுத்து வளர்த்து வருகின்றனர். அவை அவர்களைக் கடிப்பதில்லை.

நிறம்:— சில பிராணிகள் சத்துருக்களினின்று தப்புவதற்கு, அவற்றின் நிறம் அனுகூலமாயிருக்கின்றது. கொம்பேறு மூர்க்கன் என்னும் பாம்பு, மரங்களிலும் கொடிகளிலும் தங்கியிருக்கும். அதன் நிறம் பச்சையா யிருக்கின்றது. அதனால், அதன் சத்துருக்கள், அதனை இலைகளினின்று, வேறு தெரிந்துகொள்ள இயல்வதில்லை. புலியின் உடம்பில் அழகான கோடுகளும் புள்ளிகளும் உள்ளன. அவற்றால், அதன் விரோதிகள் அதனை ஏதோ சில கொடிகளின் புதர் என்று எண்ணிச் சென்றுவிடும். மற்ற விலங்குகளும் அஞ்சாமல் அருகிற் செல்லும். புலி அவற்றைப் பற்றிக்கொள்ளும்.

மீன்குத்திப் பறவை நீர்க்கரையில் அசையாமல் இருக்கும்பொழுது, மீன்கள் அதனை, பல

நிறங்கள் உள்ள ஒருவகைக் கொம்பு என்று எண்ணி, அருகிற் செல்லும். மீன்களின் மேற்புறம் கறுப்பாயும், அடிப்புறம் வெளுப்பாயும் இருக்கின்றன. அவற்றிற்கும் நீருக்கும உள்ள வேறுபாட்டைப் பறவைகளால் அறிய இயலுவதில்லை; அதனுல், அவை பறவைகளினின்று தப்பிப் பிழைக்கின்றன. அடிப்புறம் வெண்மையா யிருத்தலால், நீரின் அடியில் திரியும் பெரிய மீன்கள், நீர்மேல் சஞ்சரிக்கும் சிறுமீன்களை எளிதில் தெரிந்து கொள்ள மாட்டா. இவ்வாறு, சில பிராணிகள் நிறத்தினுல் தம்மைக் காத்துக்கொள்கின்றன. விட்டில், ஒருவகைத் தீநாற்றம் உடையது. அதனுல் அவற்றைப் பல்லி முதலியவை தின்பதில்லை. இப்படி, பாதுகாப்பிற்கும், பகையை வெல்லுதற்கும் தக்க உறுப்பு, நிறம், முதலியவை ஒவ்வொரு பிராணிக்கும் அமைந்துளன. இயற்கையின் விசித்திரம் என்னே!

அருஞ்சொற் பொருள்:

விலங்கு - மிருகம்.
விஷ வாயு - விஷங் கலந்துள்ள காற்று.
அம்புப் புட்டில் - அம்புக்கூடு.
தீ நாற்றம் - கெட்ட வாசனை.
கடந்தை - ஒருவகைத் தேன் வண்டு.
கருவி - ஆயுதம்.
திண்ணியது - உறுதியானது.
கோரப் பற்கள் - வளைந்த பற்கள்.
கொதுகு - கொசு.

கேள்விகள் :

1. கொம்பினுல் காத்துக்கொள்ளும் விலங்குகளுள் இரண்டனைக் குறித்துக் கூறுக.
2. ஆமை, தன்னை எவ்வாறு காத்துக்கொள்கிறது?
3. மிருகங்களுக்கு வாலினுல் என்ன உபயோகம்?
4. கொம்பேறு மூர்க்கன் என்பது எது? அதற்குப் பாதுகாப்பு யாது?
5. மீன்களின் மேற்புறம் என்ன நிறமாய் இருக்கும்? அதனுல், பயன் என்ன?

6. பறவை வகை

பறவைகளுள் பல வகைகள் உள்ளன. பெரும்பாலும், அவை தின்னும் உணவினுலும், அவற்றின் கால்களின் வேறுபாட்டாலும் அவற்றை வெவ்வேறு இனங்களாகப் பிரிக்கின்றனர். சில பறவைகள், தானியம் முதலியவைகளைத் தின்னும்; சில, புழு பூச்சிகளைத் தின்னும்; சில, மீன் முதலியவைகளைக் குத்தித் தின்னும்; சில, சிறிய பிராணிகளைப் பிடித்துக் கொன்று தின்னும். சில, பழங்கள் கொட்டைகள் முதலியவைகளை உணவாகக் கொள்

ளும். பறவைகள் தின்னும் உணவிற்கு ஏற்ப, அவற்றிற்கு அலகுகள் அமைந்துள்ளன. அலகினைப்பற்றி இங்குக் கவனிப்போம்:

காக்கை, குருவி முதலானவை தரையில் வசிப்பவை. அவை, தானியத்தைத் தின்னுகின்றன. அதற்குத் தக்கவாறு அவற்றிற்கு, அலகு, குட்டையாயும் குவிந்தும் இருக்கின்றது; ஆனல், அஃது உறுதியாய் இருக்கிறது. அதனல், அவை, தானியங்களை அவற்றின்மேல் உள்ள உமியை நீக்கிவிட்டுத் தின்கின்றன.



வாத்து, குள்ளவாத்து முதலியவை தரையிலும் தண்ணீரிலும் இரை தேடுகின்றன. அவற்றின் அலகுகளைப் பாருங்கள். அலகு தட்டையாயும், நீண்டு நுனி அகன்றும் இருக்கின்றது. அதனல், அவை, சேற்றிலிருக்கும் புழு பூச்சிகளை எளிதில் பற்றிக் கௌவிக்கொள்கின்றன.



ஒருவகைப் பறவை மரங்களில் குத்திக்கொண்டே செல்வதை நீங்கள் பார்த்திருக்கலாம். அது மரத்தில் குத்துவதனல், அதனே, 'மரங்குத்

திப் பறவை' என்கிறோம். அது, மரத்தைக் குத்துவது ஏன், தெரியுமா? அது, உணவைத் தேடிச்செல்லுகின்றது. மரத்தின் பட்டைக்குள், புழு பூச்சிகள் இருக்கும். அந்தப் பறவை மரத்தில் குத்தும்போது, உள்ளே புழுக்கள் இருந்தால், அதற்குத் தெரியும். அதன் அலகு நேராக நீண்டிருக்கும். அஃது



உளிபோல உறுதியானது. மரங்குத்திப் பறவை, தன் அலகினல், மரத்தில் புழு பூச்சிகள் இருக்குமிடத்தை அறிந்துகொண்டு, உடனே, தனது நீண்ட நாக்கை நீட்டி, அவற்றைப் ப்ற்றிக்கொள்ளும். நாக்கின் நுனியில் பசை இருப்பதனல், அதில் அவை ஒட்டிக் கொள்கின்றன.

நாரை, கொக்கு, மீன்குத்திப் பறவை இவை தண்ணீரில் வாழ்கின்றன. இப் பறவைகள் மீன், தவளை முதலிய பிராணிகளைப் பற்றித்



தின்னும். மீன்களைக் கௌவிப் பற்றத் தக்கவாறு இவைகளுக்கு அலகு நீண்டிருக்கின்றது. அலகின் நுனி கூராக இருப்பதுவும் அனுகூலமாகும்.

கழுகு, ராஜாளி, ஆந்தை முதலியவை, ஆகாயத்திற் பறந்துகொண்டே, தரையில் கவனித்து,

சிறு பிராணிகளின்மேற் பாய்ந்து, அவற்றைக் கொன்று தின்னும். பருந்தும் இவ்வினத்தைச்சேர்ந்ததே. பெரிய கழுகு, ஆட்டுக் குட்டியையும் தூக்கிக்கொண்டு போய்விடும். இவைகள், மாமிசத்தைக் கிழித்து உண்ணும். அதற்காக, இவற்றின் அலகு வலியதாயும், கூரியதாயும், நுனி வளைந்தும் இருக்கின்றது. அலகின் அடி, உறுதியாய் இருக்கிறது.

கிளி, பழங்களையும் கொட்டைகளையும் தின்னும்; கொட்டைகளை உடைத்துத் தின்பதை, நீ பார்த்திருக்கிறாயா? அதன் அலகு, நுனியில் வளைந்து உறுதியாய் இருக்கிறது. கீழ் அலகைக் காட்டிலும், மேல்அலகு சற்று நீளமானது.

பிள்ளைகளே, கடவுள் ஒவ்வொரு பிராணிக்கும் ஏற்றவாறு உறுப்புக்களை அமைத்திருக்கின்றார். அவர், பிராணிகளிடத்தில் வைத்திருக்கிற கருணையைப் பாருங்கள்! அவரை நாம், மறவாமல் வாழ்த்துவோமாக.

அருஞ்சொற் பொருள் :

ஏற்ப - தகுதியாக. பற்ற - பிடிக்க.
அனுகூலம் - உதவி.

கேள்விகள் :

1. காக்கையின் அலகு எவ்வாறு அமைந்துளது?
2. வாத்தின் அலகு எப்படி இருக்கிறது?
3. மரங்குத்திப்பறவை எவ்வாறு உணவு தேடுகின்றது?
4. கழுகின் அலகு எவ்வாறு இருக்கின்றது? ஏன்?

7. கன்னன் கொடை

I

பாண்டவர், பன்னிரண்டு ஆண்டுகளை வனத்திலும் ஓர் ஆண்டினை நாட்டிலும் கழித்து, பின், தங்கள் நாட்டைப் பெறவேண்டி, ஸ்ரீகிருஷ்ணரைத் துரியோதனனிடம் தூது விடுத்தனர். கிருஷ்ணர் அவ்வாறே சென்று, துரியோதனனைக் கண்டு, பாண்டவர்நாட்டைக் கொடுக்கும்படி வேண்டினர். துரியோதனன் ஒன்றற்கும் இணங்கவில்லை. அதனால், பாண்டவர் போர்புரிந்து நாட்டைக் கைப்பற்ற வேண்டுவ தாயிற்று.

ஸ்ரீகிருஷ்ணர் போரைக்குறித்து ஆலோசனை செய்தார்: 'துரியோதனனுக்கு உயிர்த்தோழனாய்க் கன்னன் விளங்குகின்றான்; அவன் சிறந்த

வில்வீரன்; அவனைப் போரில் வெல்லுதல் அரிது. அவனோ விசயன்மேல் கடும்பகை யுள்ளவன். அவன் வன்மையைத் தவிர்த்தாலன்றி, பாண்டவர் வெற்றி பெறுதல் அரிது. இதற்கு யாது செய்யலாம்' என்று நெடுநேரஞ் சிந்தித்தார். பின்னர், தேவேந்திரனை நினைத்தார். அவன் உடனே அங்கு வந்து, கிருஷ்ணரை வணங்கி, 'நான் செய்ய வேண்டிய பணியை அருளிச்செய்க' என்று வேண்டினன்.

ஸ்ரீகிருஷ்ணர் இந்திரனை நோக்கி, 'வேந்தே, இனி, பாண்டவர்க்கும் கௌரவர்க்குங் கடும்போர் நிகழும். துரியோதனன்பக்கலில் வில்வீரர் பலர் இருக்கின்றனர். அவருள் கன்னன் சிறந்தவன். கன்னன், உடலோடு தோன்றியுள்ள கவசத்தையும் குண்டலத்தையும் உடையவன். அவனுடலில் அவை இருக்குமளவும், அவன்மேல் எந்த அம்பும் தாக்காது; அவனை வெல்லுதல் இயலாது. கன்னன் விசயனிடம் மிக்க பகைமை உடையன்; அவனைக் கொல்லுதற்பொருட்டு மாநாகத்தை வளர்த்து வருகின்றான். விஜயன் இறப்பானாயின், மற்றை நால்வரும் உய்யார்; உடன் இறப்பர். உலகமெல்லாம், கொடியவனாகிய துரியோதனன் வசப்பட்டு வருந்தும். ஆகலின், நீ முதிய மறையவன் வடிவங்கொண்டு சென்று, அவன் கவசகுண்டலங்களைப் பெற்று வரல் வேண்டும். உனக்கு விஜயனிடத்தில் மிக்க அன்பு உண்டு என்பது அறிவேன். ஆதலின், நீயே இதனைச் செய்து பாண்டவரை உய்விக்க

வேண்டும். கன்னன் கொடையிற் சிறந்தவன். அவன், தேவருக்கும் மறையவருக்கும் துறவிகளுக்கும் கற்றவருக்கும் கல்லாதவருக்கும் தம் குறைகளைச் சொல்லுபவருக்கும் சொல்லாதவருக்கும் எல்லாருக்கும், மனம் உவந்து ஈயும் நற்குணம் உள்ளவன். ஆகலின், நீ மறையவனாய்ச் சென்று வேண்டுவாயாகில், அவன், தன் கவச குண்டலங்களை "இல்லை" என்று சொல்லாமல், உடனே ஈந்துவிடுவான். பின்னர் அவனை வெல்லுதல் எளிது' என்று உரைத்தார்.

இந்திரனும் அதற்கு உடன்பட்டான். அவன், நரைத்த முதிய மறையவன் வடிவங்கொண்டான்; ஒரு கையில் தடியை ஊன்றிக்கொண்டு, தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்றான்; சென்று, கன்னன் கோயில் வாயிலை அடைந்தான். வாயிற் காவலர், அவனை நோக்கி, 'ஐயரே, எம் அரசர், ஒவ்வொரு நாளும் முற்பகலில் தானம் வழங்குவார்; இப்போது முற்பகல் கழிந்தது. நீர் இன்றுபோய், நாளை முற்பகலில் வாரும்' என்றனர். அதைக் கேட்ட மறையவன், 'நான், என்னால் கூடிய அளவு விரைந்து நடந்தேன். என் முதுமையினால் இவ்வளவு நேரம் ஆயிற்று. என்செய்வேன்' என்று வருந்திக் கூறினான்.

பிராமணன் கூறியவற்றைக் கேட்ட கன்னன், அவனை அழைத்துவரும்படி உத்தரவு செய்தான். காவலர் முதியவனை உள்ளே விடுத்த

னர். மறையவனைக் கண்டதும், கன்னன், விழுந்து வணங்கி, 'தாங்கள் விரும்பியதைத் தெரிவித்தருள வேண்டும்' என்று வேண்டினன். மறையவன், 'நான் வேண்டுவதைத் தருவீரா?' என்று வினவினன். கன்னன், 'தாங்கள், என் உயிரைக் கேட்பினும் தடையின்றித் தருவேன்' என்று சொன்னன். உடனே கள்ள மறையவன், 'உமது கவச குண்டலங்களைத் தாரும்' என்று வேண்டினன். கன்னன், உடனே தன் உடலினின்று கவசத்தை அரிந்து எடுக்கலானன். அச்சமயத்தில், 'இவன் இந்திரன்; கிருஷ்ணனல் வஞ்சகமாக வந்திருக்கின்றான். கவசகுண்டலங்களை இவனுக்குக் கொடுக்காதே' என்று ஆகாயத்தில் ஒரு சத்தம் உண்டாயிற்று. கன்னன் அதைக் கேட்டும், 'இல்லை' என்று சொல்லாமல், கவச குண்டலங்களை அரிந்து, மறையவனுக்கு வழங்கினன். அப்பொழுது அவன் உடலினின்று இரத்தம் பாய்ந்தது. அதனைக் கண்டவர் வருந்தினர்; வியந்தனர்; புகழ்ந்தனர்.

கன்னனது அருங்கொடையினைக் கண்ட இந்திரன், தனது உண்மை வடிவங்கொண்டு, கன்னன் முன் நின்று, அவனைப் புகழ்ந்தான். கன்னன், இந்திரனைக் கண்ணாரக் கண்டு களித்தான். இந்திரன் மகிழ்ந்து, ஒரு வேலாயுதத்தைக் கன்னனுக்குக் கொடுத்து, 'இதை விஜயன்மேல்மட்டும் எறியாதே; பிறர்மேல் எறி. இது, உனக்கு வெற்றியைத் தரும்' என்று கூறினன். கன்னன் வணங்கி, அதனைக் கைக்கொண்டான்.

பின்பு இந்திரன், ஸ்ரீகிருஷ்ணரிடம் சென்று நடந்ததைக் கூறி, கன்னனைப் பாராட்டினான்; பின்னர், அவரை வணங்கி விடைபெற்றுச் சென்றான்.

II

ஸ்ரீகிருஷ்ணர் அதன்பின், குந்திதேவியின் மனையை அடைந்தார். அங்குக் குந்திதேவியை நோக்கி, 'நான் துரியோதனனிடம் தூது சென்றேன். அவன், உம்முடைய புதல்வருக்கு நாட்டைக் கொடுக்க உடன்படவில்லை. ஆதலால் இனி, போர் நடைபெறும். விஜயனைக் கொல்வதற்காகக் கன்னன் நாகத்தை வளர்த்து வருகின்றான். அவனே உம்முடைய மூத்த குமாரன். நீர் அவனிடம் சென்று வரம்பெற்று வர வேண்டும்' என்று கூறி, அனுப்பினார்.

குந்திதேவி கன்னன் கோயிலை அடைந்தாள். அவளைக் கண்டதும், கன்னன் அவளடிகளில் வீழ்ந்து வணங்கினான்; பின்பு ஓர் ஆசனத்தில் அமர்வித்து, 'தேவரீர் இங்கு வந்த காரியம் யாது? தயை கூர்ந்து அருளிச்செய்ய வேண்டும்' என்றான். குந்தி, 'செல்வ, நான் பெரும்பாவி; உன் மழலைச் சொல்லைக் கேட்கப் பெறவில்லை; உன் தளர்நடையைக் காணப் பெறவில்லை' என்று வருந்திக் கூறினாள். கன்னன், அவளைத் தன் தாய் என்று தெளிந்து, வணங்கி, 'தாயே, நான்

உம்மிடம் வளர்வதற்குப் புண்ணியஞ் செய்ய வில்லை. அதைப்பற்றி இப்பொழுது வருந்திப் பயன் என்ன? தேவரீர் திருவுள்ளக் கருத்தினைத் தெரிவித்தருள்க' என்று வேண்டினன்.

அப்பொழுது குந்தி, 'மகனே, நீ உன் தம்பி மாரோடு வந்து வாழ்தல் வேண்டும். அவர்கள் உனக்கு ஏவல் செய்வார்கள்' என்றாள். கன்னன், 'தாயே, துரியோதனன் எனக்குப் பல நன் மைகள் செய்திருக்கின்றான். அவன்சோற்றை உண்டு உயிர் வாழ்கின்றேன். ஆதலால், நான் அவனைவிட்டு, அங்கு வருதல் நியாயம் அன்று. வேறு ஏதாகிலும் வேண்டிக் கொள்ளும்' என் றான். குந்திதேவி, 'வீர, நீ வளர்த்துவரும் நாகத்தை விஜயன்மேல் இரண்டாம் முறை ஏவக் கூடாது; அதனை மற்ற நால்வர்மீதும் விடக் கூடாது. இந்த வரங்களைத் தரவேண்டும்' என் றாள். கன்னன், 'தாயே தாம் கூறியபடியே செய் வேன்; நான் இறந்து போவதாயிருந்தாலும் இரண்டாம் முறை நாகத்தை விடமாட்டேன். நீர் கவலைப்பட வேண்டா' என்று உரைத்தான்.

கன்னனது நற்குணத்தையும் கொடைத் தன்மையையும் அறிந்து, குந்தி வியந்தாள்; புகழ்ந் தாள். பின்பு, அவள் கன்னனை வாழ்த்திவிட்டுத் தன்கோயிலை அடைந்தாள்; நடந்ததனை ஸ்ரீகிருஷ் ணரிடம் தெரிவித்தாள். ஸ்ரீகிருஷ்ணரும் கன்ன னைப் புகழ்ந்து உரைத்தார்.

அருஞ்சொற் பொருள் :

கவசம் - உடம்பில் தரிக்குஞ் சட்டை.
உய்விக்க - பிழைப்பிக்க.
துறவி - சந்நியாசி.
அமர்வித்து - இருக்கச் செய்து.
குறுநடை - தளர்நடை; குழந்தைகள் முதலில் நடக்கும் நடை.
குண்டலம் - காதணி.
மாநாகம் - பெரிய பாம்பு.
மறையவர் - பிராமணர்.
முற்பகல் - காலை.
மழலைச்சொல் - சிறுகுழந்தைகள் பேசுஞ்சொல்.

கேள்விகள் :

1. தேவேந்திரன் கன்னனிடம் எவற்றை வேண்டினன் ?
2. இந்திரன் கன்னனுக்குக்கொடுத்தது யாது ? ஏன் ?
3. குந்திதேவி யாவர் ? அவர், கன்னனிடம் வேண்டியவை யாவை ?

---

8. உணவுச்சத்து அல்லது, வைட்டமின்

நாம் உயிர் வாழ்ந்திருப்பதற்கு இன்றியமையாத பொருள்களுள் உணவு ஒன்று என்பது உங்களுக்குத் தெரியும். உணவில் சத்துப்பொருள், மாவுப்பொருள், கொழுப்புப் பொருள், நெய், முதலியவை அடங்கியுள்ளன என்றும், அவை

நமது உடல் வளர்ச்சிக்கும் சுகத்திற்கும் வேண்டு மளவு நம் உணவில் சேர்ந்திருக்க வேண்டும் என்றும் சாஸ்திரிகள் கருதியிருந்தனர். இப்பொழுது, வைட்டமின் என்னும் ஜீவசத்து ஒன்றும் உணவுப் பொருளில் உளது என்று கண்டறிந்திருக்கின்றனர்.

வைட்டமினைக் கண்ணாற் காண முடியாது. அதன் கனத்தையும் அறிய முடியாது. அஃது எவ்வாறு உண்டாகின்றது என்பது இன்னும் நன்ருக விளங்கவில்லை. ஆனல், அது, உடல் வளர்ச்சிக்கும் சுகவாழ்விற்கும் இன்றியமையாதது என்றும், அது குறைந்தால் நோய்கள் உண்டாகும் என்றும் அறிந்திருக்கின்றனர்.

வைட்டமின், தானியம் தவசம் கறிகாய் பழம் முதலிய விளைபொருள்களில் அடங்கியுளது; 'காட்லிவர் ஆயில்' என்னும் மீன்நெய்யில் வைட்டமின் உளது. சிறு மீன்கள், பாசியையும், தண்ணீரிலிருக்கும் செடிகளின் இலை முதலியவற்றையும் தின்னும். அவ்வுணவினல் சிறு மீன்களுக்கு வைட்டமின் சத்துக் கிடைக்கின்றது. அந்த மீன்களைத் தின்பதனல் 'காட்' என்னும் மீனுக்கும் வைட்டமின் சத்து வருகின்றது. அதனல், அம்மீனின் நெய்யிலும் அச் சத்து அடங்கியுளது. பசுவின் பாலில் உள்ள வைட்டமின், பசு தின்னும் புல்லினின்று வந்ததுவே. அதனல்தான், காடுகளில் திரிந்து பசும்புல்லை மேயும் பசுவின் பாலில் வைட்டமின் அளவு அதிகமாயும், வீட்டிலே இருந்து

வைக்கோலையே தின்னும் பசுவின் பாலில் மிகக் குறைவாயும் உளது. இதனல், சென்னை முதலிய நகரங்களில் வீடுகளில் வளர்க்கும் பசுக்களின் பால் சரியான பயன் தருவதில்லை என்பது அறிதல் கூடும். பசுக்கள் தின்னும் உணவின் வேறுபாட்டினல், அவற்றின் பால், தன்மையிலும் பயனிலும் வேறுபடுகின்றது.

வைட்டமினில் பலவகை உள்ளன. அவற்றை இப்போது ஆறு வகையாகப் பிரித்திருக்கின்றனர். அவை ஏ, பி, ஸி, டி, இ, யப் (A. B, C, D, E, F) எனப் பெயர் பெறும். நாளடைவில் இன்னும் பல வகை உள என்று அறியப்படுதலும் கூடும்.

ஏ (A). இது, உடம்பினையும் அறிவினையும் வளர்க்குந் தன்மையது; மூக்கு, சுவாசப்பை, தொண்டை இவற்றில் நோய் வாராமற் காக்க வல்லது. இது குறையுமாயின், கண்ணெளி மங்கும். மீன்நெய், பால், வெண்ணெய், நெய், கோழி முட்டை, சிலமீன்கள், புதியமாமிசம், கீரை இவற்றில் 'ஏ' என்னும் வைட்டமின் உளது. உணவுப் பொருளை அதிகமாக வேகவைத்தால் இசசத்துக் கெட்டுவிடும். ஆதலின், அளவாக வேகவைப்பது நல்லது.

பி (B). இது, உயிர்வாழ்விற்கும் சுகத்திற்கும் இன்றியமையாதது. உணவுப் பொருள்களில் இது குறைந்தால், பசியின்மை, நரம்புத் தளர்ச்சி முதலியவை உண்டாகும். பால், புதிய மாமிசம், கோதுமை, நெல்லரிசி, கேழ்வரகு, பழங்கள்,

கொட்டைகள் முதலியவற்றில் இச்சத்து உளது. இது, நெல் கோதுமை முதலிய தானியங்களில் உமிக்குள், அரிசியின்மேலுள்ள தவிட்டில் இருக்கின்றது. நெல்லரிசியை யந்திரங்களில் தீட்டுவதனால், தவிடு ஒரு சிறிதும் இன்றி நீங்கிவிடுகின்றது. அதனால், அவ்வரிசியில் வைட்டமின் பெரும்பாலும் இருப்பதே இல்லை. ஆகலின், யந்திரங்களில் தீட்டிய அரிசியினால் உடம்பிற்கு உரம் உண்டாகாது. உலக்கையால் குற்றி எடுக்கும் அரிசியே நல்லது. அதனையும் தவிடு முழுதும் போய்விடும்படி தீட்டுதல் கூடாது. அவ்வாறு தீட்டினால், அதிலிருந்த வைட்டமின் நீங்கிவிடும். 'வரையற்றுத் தீட்டினால் கிளையற்றுப் போகும்' என்னும் பழமொழியினாலும், தவிடு முழுதும் போகுமாறு தீட்டுதல் கூடாது என்பது அறிதல் கூடும். சிலர், தவிடு அற நன்றாகத் தீட்டினால், சோறு தும்பைப்பூப்போல் வெள்ளையாய், பார்க்க அழகாய், இருக்கும் என்று சொல்லி, தவிடு முழுவதையும் நீக்கி விடுகின்றனர். அது கூடாது. இக்காலத்தில், 'மில் அரிசி' எங்கும் பரவியுளது. அதனை நீக்கி, முன்போலக் 'கைக்குத்தலரிசி'யையே உணவிற்குக் கொள்ளவேண்டும். அதனால், நாம் உரமும் சுகமும் உடையவராயிருப்போம்; ஏழைப் பெண்டிரும் நெல்லைக் குற்றிக் காலங் கழிப்பர். கேழ்வரகினை அப்படியே திரித்து உணவாகக் கொள்ளுவதனால் அதிலுள்ள சத்து நீங்குவதில்லை. அதனால், நெல்லரிசியினும் கேழ்வரகே சுகவாழ்விற்கு ஏற்றது.

ஸி (C). இது வன்மையையும், இரத்த சுத்தியையும் உண்டுபண்ணும். தக்காளி, அன்னசி, ஆரஞ்சு முதலிய பழங்களில் இஃது அதிகம் உளது; பாலிலும் காய்கறிகளிலும் சிறிதளவு உளது. இது, சூடு தாக்கினல் எளிதில் கெட்டுவிடும். அதனல், பாலேக் காய்ச்சினலும், காய்கறிகளை வெயிலில் உணக்கி வற்றல் போட்டாலும், இந்தச் சத்து நீங்கிவிடும்.

டி (D). இஃது எலும்பின் வளர்ச்சிக்கு வேண்டுவது. உணவில் உள்ள உலோகப்பொருள் உடலிற் சேர்ந்து பயன்படச் செய்வது இதுவே. இது, மீன்நெய்யிலும் கோழிமுட்டையிலும் மிகுதியாய் உளது. இது, வேண்டியவளவு உடம்பில் இல்லாது போனல், எலும்பிற்கு வளைவு ஏற்படும். சிலருக்குக் கூன் உண்டாவதற்கும், குழந்தைகளுக்குக் கால்கள் வளைந்துபோவதற்கும் காரணம் இந்த வைட்டமின் இல்லாமையே.

இ, யப் (E, F)— இவை உடலின் சுகத்திற்கு அவசியமாக வேண்டுவன அல்ல. ஆயினும், இவற்ருல் சில நன்மைகள் உண்டாகின்றன.

சரீரவளர்ச்சிக்கும் சுகத்திற்கும் வேண்டிய வைட்டமின் நமக்கு ஆவசியகம். ஆதலின், அவை அடங்கிய உணவுப்பொருள்களை மிகுதியாக உட்கொள்ள வேண்டும். அவை வேண்டிய அளவு உட்கொள்ளாவிட்டால், உடல்வலிமை குறையும். அப்பொழுது நோயை உண்டுபண்ணுங் கிருமிகள் பல்

கித் தீங்கு விளக்கும். ஒவ்வொரு நோய்க்கும் ஒவ்வொரு வைட்டமின் இல்லாமையே காரணம். ஆகலின், ஒரு நோயைத் தடுக்க வேண்டுமாயின், அதற்கு வேண்டிய வைட்டமின் உள்ள உணவுப் பொருளை உட்கொள்ள வேண்டும். கோதுமை கேழ்வரகு கம்பு முதலிய ஒற்றைப்பருப்புத் தானியங்களையும், பால் வெண்ணெய் தயிர் நெய் இவற்றையும், கோழிமுட்டை புதிய இறைச்சி பழங்கள், கீரைகள் இவற்றையும் வேண்டுமளவு உண்பார்களாயின், உடல், வலிமையாயும், பெரும்பாலும் நோயில்லாததாயும் இருக்கும்.

உடம்பில் எந்தச் சத்துக் குறைந்திருக்கின்றதோ அந்தச் சத்துக்கள் உள்ள பொருள்களைச் சேர்த்த மருந்தைத் தின்றால் போதும் என்று சில காலத்திற்கு முன்வரை எண்ணியிருந்தார்கள். அந்த மருந்துகளால் முழுப்பயன் உண்டாதல் இல்லை என்றும், அந்த அந்த வைட்டமின் உள்ள உணவுப் பொருளையே உட்கொள்ள வேண்டும் என்றும் இப்போது கண்டறிந்திருக்கின்றனர். இதனால், இயற்கையான உணவே நல்லது என்பது நன்கு விளங்கும்.

சிலர் உணவினைச் சமைக்காமல் பச்சையாகவே உட்கொள்கின்றனர். பழம், கீரை, தேங்காய், பால், சில கறிகாய்கள் இவற்றைப் பச்சையாகத் தின்னலாம். வேகவைத்தாலும் வைட்டமின் கெட்டுப்போகாத பொருள்களை அளவாக வேக

வைத்து உண்ணலாம்; சூட்டினல் வைட்டமின் கெட்டுப்போகக் கூடிய உணவினைப் பச்சையாக உட்கொள்ளுதல் நல்லது. 'கடவுள் பொருள்களைப் படைத்தார்; பிசாசு சமையலை உண்டுபண்ணிற்று' என்னும் பொருளில், ஆங்கிலத்தில் ஒரு பழமொழி வழங்குகின்றது. இக்காலத்தில், இயற்கையுணவினையே, அஃதாவது சமையல் செய்யப் படாத உணவினையே, உட்கொள்ள வேண்டும் என்னுங் கொள்கை ஆங்காங்குச் சிறிது பரவிவருகின்றது. நமது தேசத்திலும் அவ்வாறு உண் போர் சிலர் இருக்கின்றனர்.

அருஞ்சொற் பொருள் :

தவசம் - பயறு, கொள்ளு, கடலை முதலியன.	கிளை - சுற்றம்.
	உரம் - வலிமை.
உணக்கி - உலர்த்தி.	பல்கி - அதிகமாகி.

கேள்விகள் :

1. வைட்டமின் எந்தப் பொருள்களில் இருக்கிறது?
2. மீன் நெய்யில் வைட்டமின் இருப்பது எதனுல்?
3. 'மில் அரிசி'யின் தீமை என்ன?
4. எலும்பின் வளர்ச்சிக்கு வேண்டும் வைட்டமின் எது?
5. பாலில் என்ன என்ன வைட்டமின் இருக்கின்றன?

9. கூட்டுறவுச் சங்கம்

நமது நாட்டில் முக்கியமான தொழில் உழவுத் தொழில். உழவுத்தொழில் செய்பவர்கள் பெரும் பாலும் கிராமங்களில் வாழ்கிறார்கள். அவர்களுட் பெரும்பாலோர் ஏழைகளா யிருக்கின்றார்கள். ஆகலின், அவர்கள் வியவசாயம் செய்வதற்குக் கையிற் பொருளின்றிக் கடன் வாங்குகின்றனர். குறைந்த வட்டியில் அவர்களுக்குக் கடன் கொடுப் பவர் இலர். கடன்கொடுப்பவர் அன்பு, இரக்கம், நியாயம் ஒன்றும் இல்லாத கல்நெஞ்சராய் இருக் கிறார்கள். அவர்களிடம் அதிக வட்டிக்குப் பணம் வாங்கி, ஏழைகள் வியவசாயம் செய்கின்றனர். வியவசாயத்தில் வரும் சிறிய வருமானத்தைக் கடனுக்குக் கொடுத்துவிட்டு, பின்னுங் கஷ்டப் படுகின்றனர். இதனால், சிலர் உழவுத்தொழிலை விட்டுவிட்டுப் பிறநாடுகளில் பிழைக்கச் செல் கின்றனர்.

வியவசாயிகளின் பணக்கஷ்டத்தைத் தீர்ப் பதற்காக, அரசாங்கத்தார் கிராமங்களில் கூட்டுற வுச் சங்கத்தை ஏற்படுத்தி, உதவிசெய்கின்றனர். ஒரு கிராமத்தில் கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்த வேண்டுமானால், பதின்மராவது அதில் சேர்பவரா யிருத்தல் வேண்டும். அவ ரனைவரும் ஒரே ஊரில் குடியிருப்பவரா யிருத்தல்வேண்டும்; அருகில் உள்ள ஊரில் இருப்பவராயும் இருக்கலாம்.

செல்வரையும் கற்றவரையும் சங்கத்தில் சேர்த்துக்கொள்வது நல்லது. சங்கத்தில் சேருவோர் ஒவ்வொருவரும், ஏற்பட்ட தொகையை முதலிற் செலுத்தி, பங்கு எடுத்துக்கொள்ள வேண்டும். சங்கத்தில் சேர்ந்திருக்கும் அங்கத்தினர் எல்லாரும் கூடி, சங்கத்தை நடத்திவருவதற்காகச் சிலரை ஒரு சபையாக ஏற்படுத்துவார்கள். அந்தச் சபையார் தங்களுக்குள் ஒருவரைக் காரியதரிசி (செக்ரட்டெரி) யாக ஏற்படுத்திக்கொள்வார்கள். கடன் வாங்குதல், கடன் கொடுத்தல் முதலியவை சபையாரின் வேலை. அங்கத்தினர் கொடுத்த பங்குத் தொகையையும், அரசாங்கத்தார் கொடுக்குந் தொகையையுங் கொண்டு கடன் கொடுப்பார்கள். செல்வர்கள், தங்கள் பணத்தை, இந்தச் சங்கத்தில் வட்டிக்குக் கொடுத்துவைப்பார்கள். அதற்கு வட்டி குறைவாயிருக்கும்.

பழைய கடனைத் தீர்ப்பதற்கும், உழவுத் தொழில், வியாபாரம் செய்வதற்கும், சங்கத்திலிருந்து கடன் வாங்கிக்கொள்ளலாம். வாங்கும் பணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பல தடவைகளில் கொடுக்கலாம்; வட்டியும் குறைவானதே. இவ்வாறிருக்கவும், சிலர் குறிப்பிட்ட காலத்தில் பணத்தைச் செலுத்துவதில்லை.

சங்கத்தின் அங்கத்தினருள் ஒருவர் வாங்கின கடனைக் கொடுக்க இயலாவிடின், அதனைச் சங்கத்தின் அங்கத்தினர் எல்லாரும் சேர்ந்து கொடுக்க வேண்டும். ஆதலால், சங்கத்தார் கடன் கொடுக்கும்

போது, கடன் வாங்குபவரின் செல்வ நிலைமையை நன்கு கவனிக்கவேண்டும். சில சங்கங்கள் அவ்வாறு கவனிக்காமல் கடன் கொடுத்துவிடுகின்றன. அதனால், பின்பு, அங்கத்தினர் பலர் கஷ்டப்படுகின்றனர். அது கருதி, சிலர் கூட்டுறவுச் சங்கங்களே வேண்டா என்கின்றனர்; சிலர் அதில் அங்கத்தினராகச் சேர்தற்கு அஞ்சுகின்றனர். ஆதலால், சங்கத்தின் முக்கிய அதிகாரிகள், கடன் வாங்குபவரைப் பற்றி, நன்ருக விசாரித்து அறிய வேண்டும்; அவர்கள்நிலைமையை அடிக்கடி கவனித்துவர வேண்டும்.

நாம் நமக்கு வேண்டும் உணவுப்பொருள்களைக் கடைகளில் வாங்குகின்ரேம். அவற்ருல் வரும் லாபத்தைக் கடைக்காரர் அடைகின்றனர். நாம் எவ்வளவு விலை கொடுத்தாலும், சில சாமான்கள் நல்லவையாயும் கலப்பில்லாதவையாயும் கிடைப்பதில்லை. வெண்ணெய், நெய், எண்ணெய் இவை சுத்தமானவையாகக் கிடைப்பது அருமை. ஊரிலிருப்பவர் எல்லாரும் ஒரு சங்கமாகச் சேர்ந்து, ஒரு பங்குக்கு ஐந்து ரூபாய் வீதம் மூலதனம் சேர்த்து, வியாபாரம் நடத்தலாம். அப்பொழுது நல்ல சாமான்கள் கிடைக்கும். அவற்ருல் வரும் லாபமும் தங்களுக்கு வரும். இவ்வாறு, சென்னப்பட்டணம் முதலிய நகரங்களில் நடைபெறுகின்றது.

ஒவ்வொரு தொழிலாளிகளும் இவ்வாறு சங்கம்ஏற்படுத்தி, நடத்திவரலாம். மாணவர்களும்

கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தி, தங்கட்கு வேண்டும் புஸ்தகங்கள் முதலியவற்றைச் சங்கத்தின் மூலமாக வாங்கலாம். அதனுல் வரும் லாபத்தை, ஏழைமாணவருக்குக் கொடுத்து உதவலாம்.

இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களை நடத்துவோர், உண்மையுள்ளவர்களாய் இருக்கவேண்டும்; சுயநலங் கருதுதல் கூடாது. நம் நாட்டு மக்கள் ஒருவரை ஒருவர் நம்புதல் இல்லை; நம்பினவர்களுக்கு விசுவாசம் உண்டாகும்படி நடப்பதும் இல்லை. அதனுல், நம் நாட்டில், ஜனங்கள் பலர் ஒருங்கு சேர்ந்து, தொழில் நடத்துதல் இல்லை; நடத்துந் தொழில்களும் விருத்தியாதல் இல்லை.

இங்கிலாந்து முதலிய தேசங்களில், பலர் ஒருங்கு கூடி, மூலதனம் வைத்துப் பெரிய தொழிற்சாலைகளையும் வியாபாரங்களையும் நடத்துகின்றனர். அதனுல், அவர்களுக்கு ஏராளமான லாபம் கிடைக்கின்றது. நமது நாட்டிலுள்ள இருப்புப் பாதைகளுள் பெரும்பாலன, பல சங்கத்தார்களால் நடைபெறுகின்றன. மேல்நாட்டார் வியாபாரங்களில், நம்பிக்கையும் உண்மையும் உடையவராய் இருக்கின்றனர். அவர்கள், பொய் சொல்வது மிக்க இழிவான செயல் என்று கருதுகிருர்கள். நம் நாட்டவரும், அவர்களைப்போல உண்மையும் நம்பிக்கையும் உடையவர்களாகி, கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றை ஏற்படுத்தி நடத்துவார்க

னால், மிக்க ஊதியத்தை அடையலாம். நமது நாடும் செல்வமிக்கது ஆகும்.

அருஞ்சொற் பொருள் :

வருமானம் - வரும்படி. பதின்மர் - பத்து மனிதர்.
சுயநலம் - தம்நலம். ஊதியம் - லாபம்.

கேள்விகள் :

1. சிலர், உழவுத்தொழிலை விட்டுவிடுதற்குக் காரணம் என்ன ?
2. கூட்டுறவுச் சங்கம் நடைபெறுவது எப்படி ?
3. கூட்டுறவுச் சங்கத்தின் நன்மை என்ன ?
4. சங்கத்தின் முக்கிய அதிகாரிகள் கவனிக்க வேண்டியது யாது ?
5. கூட்டுறவினால், வேறு என்ன என்ன நன்மைகளை உண்டாக்கலாம் ?

10. நாம் எல்லாரும் குற்றவாளிகளே

ஸ்ரீராமர், சீதையோடும் இலக்குவனோடும் காட்டிற்குச் சென்று, சித்திரகூட மலையில் தங்கியிருந்தார் என்று, நீங்கள் முன்னொரு பாடத்தில் படித்தீர்களல்லவா? அவர்கள் அவ்விடத்தினின்று நீங்கி, கோதாவரியாற்றுக்கு அருகில், பஞ்சவடி என்னும் இடத்தில் வாழ்ந்திருந்தார்கள்.

அக்காலத்தில், இலங்கையை ஆண்ட இராவணன் என்னும் அரக்கன், வஞ்சனையால், சீதையை எடுத்துக் கொண்டுபோய், சிறைவைத்தான். இராமரும் இலக்குவனும் சீதையைத் தேடிச் சென்றனர்; வழியில் அனுமானைக் கண்டனர்; அவனால் சுக்கிரீவனோடு நட்புக்கொண்டனர். அனுமான் தேடிச்சென்று, சீதை இருக்கும் இடத்தைத் தெரிந்துவந்தான். பின்பு, சீதையை விட்டு விடும்படி, இராமர், இராவணனுக்குத் தூது அனுப்பினர். அதற்கு இராவணன் உடன்படவில்லை. அதனால் பெரும்போர் நடந்தது. இராவணனும், அவன் மக்களும், துணைவரும், படைகளும் போரில் மாய்ந்தனர்.

இராவணன் இறந்த நற்செய்தியைச் சீதைக்குத் தெரிவித்துவரும்படி, இராமர் அனுமானை அனுப்பினர். அனுமான் உவப்புடன் ஓடிச் சென்று, சீதாதேவியைக் கண்டு வணங்கி, 'தாயே, சோபனம்! சோபனம்!! சோபனம்!!!' என்று பாடி ஆடி, இராவணன் இறந்துபோன செய்தியைத் தெரிவித்தான். அதனைக் கேட்ட சீதை அகம் மகிழ்ந்தாள்; அனுமானை வாழ்த்தினாள்; இராமபிரான் இருக்குந் திசைநோக்கி இறைஞ்சினாள்; துதித்தாள். அவளது முகம் மலர்ந்தது; உடல் பூரித்தது; கண்கள் ஆனந்தக்கண்ணீர் சொரிந்தன.

அப்பொழுது அனுமான், அங்குச் சீதையைக் காத்திருந்த அரக்கிமாரைக் கண்டான்; கண்டு,

இவ்வாறு கருதுவானாயினான்: 'இவர்கள் மிக்க கொடியவர்; இரக்கமே இல்லாதவர்; பிறருக்கு இன்னல் செய்யும் இயல்பினர். ஆ! ஆ!! முன்பு, நான் இங்கு வந்திருந்தபோது, இவர்கள் சீதா தேவிக்கு எவ்வளவோ துன்பம் இழைத்ததைப் பார்த்தேன். அப்பொழுது, இவர்களைச் சும்மா விட்டுவிட்டேன். இவர்கள் செய்த குற்றத்தைப் பொறுத்திருப்பது சரியன்று. இவர்களை இப்பொழுதே வதைக்கின்றேன்.'

அரக்கியரைக் கொல்லக் கருதிய அனுமான், சீதையை வணங்கி அகன்று, அங்கிருந்த அரக்கியரைப் பற்றத் தொடர்ந்தான். அனுமான் தங்களைப் பிடித்துக் கொல்ல வருதலை, அரக்கியர் அறிந்தனர். அவர்கள், புலியைக் கண்ட மான்களேபோல, அஞ்சினர்; ஓடினர்; கதறினர்; அனுமானை வணங்கினர்; வேண்டிக்கொண்டனர். அனுமான், அவரை விடாது பற்றலானான்.

அப்பொழுது அரக்கியர் அனைவரும், வேறு கதி இல்லாமல், சீதாதேவியை அடைக்கலம் புகுந்தனர்; 'தாயே சரணம், சரணம்' என்று அவரடியில் வீழ்ந்தனர்; அனுமான் செயலை அறிவித்து, தங்களைக் காப்பாற்ற வேண்டிக்கொண்டனர்.

அரக்கியர் படுந் துன்பத்தைக் காணப் பொறாத தேவி, அனுமானை விளித்து, அவர்களை விட்டுவிடும்படி கூறினாள். அப்பொழுது அனுமான், சீதையை வணங்கி, 'தாயே, இவர்கள் இதுவரை

யும் தங்களுக்கு எத்தனையோ கொடுஞ்செயலை இழைத்திருக்கின்றனர். முன்பு ஒருநாள் இவர்கள் செய்த துன்பத்தை, நான் கண்ணாரக் கண்டிருக்கிறேன். இவர்கள்மீது இரக்கம் கொள்ளுதல் சரியன்று. கொடியவர்களைத் தண்டிப்பது நியாயம். ஆதலால், இவர்களைக் கொல்லுதற்கு, அடியேனுக்கு உத்தரவு தரவேண்டும். ஒரு நொடிப் பொழுதில், இவர்கள் எல்லாரையும் எமனுலகத்திற்கு அனுப்பிவிடுகிறேன்' என்று, உத்தரவு வேண்டிநின்றான்.

சீதாதேவி அனுமானை நோக்கிக் கூறுவாள்: 'அன்னையைப்பார்க்கிலும் அன்பு மிக்க ஐயனே, கேட்பாயாக. நீ கூறியபடி, இவர்கள் கொடியவர்கள் அல்லர். இவர்கள், தாமாக எனக்குத் தீங்குசெய்யவில்லை; தங்கள் அரசன்கட்டளைப்படி செய்தனர். அஃது இவர்கள் கடமையே. அரசன் கட்டளையை நிறைவேற்றுவதுவே நியாயம். ஆதலால், இவர்கள் செய்த கொடுஞ்செயல் குற்றம் ஆகாது. என்னைத் துன்புறுத்தாமல் இருந்திருப்பின், அதுவே குற்றமாகும்; அரசன் கட்டளையின்படி செய்யாத குற்றத்திற்காக இவர்களைத் தண்டிக்கலாம். இப்பொழுது இவர்களைத் தண்டிப்பது நியாயம் ஆகாது. இருக்கட்டும்: இவர்கள் குற்றம் செய்தவர்கள் என்றே வைத்துக்கொள்வோம். உலகத்தில் குற்றம் செய்யாதவர் யாவர்? எல்லாரும் தவறு செய்பவரே. நான் குற்றவாளி; நீ

குற்றவாளி; இலக்குவன் குற்றவாளி; இராமரும் குற்றவாளியே. சொல்லுகின்றேன், கேள்.

'இராமபிரான் என்னைப் பார்த்து, "நான் பதினான்கு ஆண்டுகள் காட்டில் வாசம் செய்துவிட்டு வருகிறேன். நீ என்னோடு வரல் வேண்டா; இங்கே இரு" என்று கூறினார். நான், அவர்கட்டளையை மீறி, அவரோடு காட்டுக்கு வந்தேன். அதனால், நான், கணவன் கட்டளையை மீறிய குற்றவாளி ஆவேன்.

'ஸ்ரீராமர், என்னைத் தேடி வருதற்காக, முன்பு, உன்னை விடுத்தார். நீ, அவ்வாறே என்னைத் தேடி இங்கு வந்தாய்; என்னைக் கண்டாய். உடனே, அச் செய்தியை அவருக்குத் தெரிவித்தல் வேண்டும். உனக்கு அவர் இட்ட கட்டளை அவ்வளவே. நீ, அவர்கட்டளை இல்லாதபடி, இந்த வனத்தை அழித்தாய்; காவலரை வதைத்தாய். இலங்கையை எரித்தாய். இவையெல்லாம் நியாயமா? இராமர் சொல்லாத கொடுஞ்செயல்களை நீ செய்தாய். இவர்கள், இராவணன் சொல்லாத கொடுஞ்செயலைச் செய்யவில்லை. இவர்கள் குற்றவாளிகளா, நீ குற்றவாளியா? எண்ணிப்பார்.

'இராமர், தாம் வரும்வரை, என்னைக் காத்திருக்கும்படி இலக்குவனிடஞ் சொல்லிவிட்டு, மானைப் பிடிக்கச் சென்றார். அவர் நெடுநேரம் வாராததனால், நான் வருந்தினேன். இலக்குவன், தமையன்சொல்லைக் கடந்து, என்னைத் தனியே

விட்டுவிட்டு, அவரைத் தேடிச் சென்றான். நான் தனியே இருந்ததனால், இராவணன் என்னை எடுத்துவந்தான். அதனால், இத்தனைத் துன்பங்கள் நேர்ந்தன. அண்ணன்சொல்லை மீறியது குற்ற மன்றோ? ஆகலின், இலக்குவன் குற்றவாளியே.

'ஸ்ரீராமர் காட்டுக்கு வரும்போது, நான், "உம்மைப் பிரிந்து இங்கிருக்க முடியாது. உம்மோடு வருவேன். என்னையும் கூட்டிக்கொண்டு செல்லும்" என்று கூறினேன். அவர், என் சொல்லைக் கேட்டு, என்னைக் காட்டுக்குக் கொண்டு வந்தது தவறு. அன்றியும், நான் அழகான மானைக் கண்டு, அதைப் பிடித்துத்தர வேண்டினேன். அப்போது இலக்குவன், "இஃது உண்மையான மான் அன்று; மாயமான்" என்று தெரிவித்தான். அதனைக் கேட்காமல், பெண்ணாகிய என் சொல்லைக் கேட்டு, அந்த மானைப் பிடிக்கச் சென்றது பெருந் தவறே யாகும். ஆதலால், இராமரும் குற்றவாளியே. ஆகவே, நாம் எல்லாரும் குற்றவாளிகளே.

'குற்றஞ் செய்தவரைத் தண்டித்தல் வேண்டுமானால், முதலில் என்னைத் தண்டிக்கவேண்டும். அதன்பின், உன்னைத் தண்டிக்கவேண்டும்; இராமலட்சுமணரையும் தண்டித்தல் வேண்டும். அதன்பின், கடைசியில் இவர்களைத் தண்டிக்கலாம்.

'உயிர்கள் செய்யுங் குற்றங்களைக் கடவுள் பொறுத்துக் காக்கின்றார். பெரியோர், பிறர் செய்யும் பிழைகளைப் பொறுத்துக்கொள்கின்றனர்.'

இவ்வாறு சீதாபிராட்டி அறவுரை கூறினள். அவற்றைக் கேட்ட அனுமான், 'தாயே, என் பிழையைப் பொறுத்தருள வேண்டும்' என்று வணங்கினன். அரக்கியர், மகிழ்வுற்றுச் சீதா தேவியை வாழ்த்தினர்.

அருஞ்சொற் பொருள் :

மாய்ந்தனர் - இறந்தனர்.
துன்புறுத்தாமல் - துன்பப் படுத்தாமல்.
இழைத்தது - செய்தது.
விளித்து - கூப்பிட்டு.
இறைஞ்சினள் - வணங்கினள்.
இன்னல் - துன்பம்.

கேள்விகள் :

1. சீதை இருக்குமிடத்தை முதலில் அறிந்துவந்தவர் யார்?
2. அனுமான் அரக்கிமாரைக் கொல்லக் கருதியது ஏன்?
3. அரக்கிமார் குற்றவாளிகள் அல்லர் என்று சீதை கூறியது எதனால்?
4. அனுமான் குற்றவாளி ஆதல் எப்படி?
5. இலக்குவன் செய்த குற்றம் யாது?

11. தொத்துநோய்

மனிதர்களுக்குத் துன்பந் தருபவற்றுள், முக்கிய மானவை, வறுமையும் நோயும் ஆகும். வறுமையி னும் நோயே கொடியது. நோய்களுள் சாதாரணக் காய்ச்சல், அஜீரணம், காதுவலி முதலிய

நோய்கள், நோயாளியைமட்டுமே வருத்தும்; அவருக்கு அருகில் இருப்பவர்களைப் பீடிக்கமாட்டா. விஷக்காய்ச்சல், கண்வலி, வைசூரி முதலிய வேறு சில நோய்கள், நோயாளிக்கு உதவி செய்ய அருகில் வருபவர்களையும், அடுத்த இடங்களில் இருப்பவர்களையும் பற்றும். அப்படிப்பட்ட நோய்க்குத் 'தொத்துநோய்' என்று பெயர். தொத்து நோயைச் சிலர், 'ஒட்டுவார் ஒட்டி' என்று சொல்வார்கள்.

தொத்துநோய்கள், அணுவுயிர்களால் உண்டாகின்றன. அணுவுயிர்கள், நம்மைச் சுற்றி நாலு பக்கத்திலும் வசிக்கின்றன. அவை, நாம் உட்கொள்ளும் வாயு, நீர் முதலியவற்றோடு சேர்ந்து, நம் உடம்பினுள் செல்கின்றன. அன்றியும், உடம்பில் காயம் ஏற்பட்டால், அதன்மூலமாயும் உள்ளே சென்றுவிடும். ஆயின், எல்லா அணுக்களும் நோயை உண்டுபண்ணுவன அல்ல. சில அணுக்கள் விரைவில் நோயை உண்டாக்கும்; சில அணுக்கள் பல ஆண்டுகட்குப் பின்பு நோயை உண்டுபண்ணும். க்ஷயம், குஷ்டம் முதலிய நோய்கள், நெடுங்காலத்துக்குப்பின் உண்டாவன.

தொத்து நோய்களுள் முக்கியமானவை— சொறிசிரங்கு, கண்வலி, குளிர்காய்ச்சல், வைசூரி, விஷபேதி, பிளேக் முதலியவை. இவற்றுள், குளிர்காய்ச்சல் முதலியவை கொடுமையானவை. ஆகலின், அவற்றைக்குறித்து இங்குச் சிறிது கவனிப்போம் :

குளிர்காய்ச்சல்: — குளிர்காய்ச்சலைப்பற்றி நாம் கவலைப்படுவதில்லை. அதற்குக் காரணம், அது நெடுங்காலமாக நடைபெற்று வருவதேயாகும். குளிர் காய்ச்சலால் இறப்பவர் பலர். நமது தேசத்தில் ஒரு வருடத்தில் ஏறக்குறைய ஐம்பது லக்ஷம் மனிதர் இந் நோயால் இறக்கின்றனர். குளிர் காய்ச்சலை, 'மலேரியா ஜ்வரம்' என்று சொல்வது உண்டு.

குளிர்காய்ச்சல், ஒருவகை அணுக்களால் உண்டாகின்றது. அந்த அணுக்கள், 'அனேபிலிஸ்' என்னும் ஒரு ஜாதிக்கொதுகுகளைச் சார்ந்திருக்கும். அக் கொதுகுகள் நம்மைக் கடிக்கும் போது, அவ் வணுக்கள் இரத்தத்தில் கலக்கின்றன. பின்பு, அவற்றால் காய்ச்சல் உண்டாகின்றது.

மலேரியா நோய்க்குக் காரணமான கொதுகுகள் புல், பூண்டு, பூச்சிகள் இருக்கின்ற குட்டைகளிலும் வாய்க்கால்களிலும் வசிக்கும்; சதுப்பு நிலத்திலும் தங்கியிருக்கும். அவை, அரைமைல் தூரம்வரை செல்லும். அந்தக் கொதுகுகளை அழிக்க வேண்டுமானால், அசுத்தமான நீர்நிலைகளைத் தூர்த்துவிட வேண்டும்; தேங்கிக் கிடக்கும் தண்ணீரில், சிறிது மண்ணெண்ணெயாவது, 'பெட்ரோலிய'மாவது ஊற்ற வேண்டும். ஊரின் பக்கங்களை அசுத்தம் செய்யக் கூடாது. வீடுகளுக்கு முன்னால், மரம் செடிகள் அடர்ந்திருத்தல்

ஆகாது. வீட்டுக்குள், வெளிச்சமும் காற்றும் வருதற்கு, வசதி செய்யவேண்டும். இரவில் கொதுகுவலையை உபயோகித்தல் நல்லது. 'க்வினின்' என்னும் மருந்தைத் தின்றால் ஜ்வரம் நீங்கிவிடும்.

வைசூரி:—வைசூரி பயங்கரமான நோய். அதனால் இறப்பவர் பலர். அதுவே யன்றி, அதனால் முகம் விகாரம் அடைபவர் மிகப் பலர்; கண் கெடுபவர் சிலர். வைசூரிக்குக் காரணமான அணுக்கள், காற்றினால், ஒரு மைல் தூரம்வரை பரவும். அவை மனிதருடம்பினுள் புகுந்தபின், அவற்றிலிருந்து, ஒருவகை விஷம் உண்டாகிறது. அது சிறிதளவாயிருந்தால் தீங்கு உண்டாகாது. வைசூரி வாராமல் தடுக்க வேண்டுமானால், அம்மை குத்திக்கொள்ள வேண்டும். ஒருதடவை அம்மை குத்திக்கொண்டால் போதாது; ஏழு ஆண்டுகளுக்கு ஒரு தடவை, அம்மைகுத்திக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு அம்மை குத்திக்கொண்டால், வைசூரி வாராது; வந்தாலும் பெருந் தீங்கு உண்டாகாது.

வைசூரியைத் தீர்ப்பதற்கு மருந்து ஒன்றும் இல்லை. அதனால், அது வாராதபடி தடுத்துக் கொள்ளுதல் வேண்டும். வைசூரிநோய் உண்டாகுங் காலத்தில், அடிக்கடி விளக்கெண்ணெய் சாப்பிடவேண்டும்; மோர், இளநீர் முதலியவற்றைத் தாராளமாகக் குடித்துவரவேண்டும். அந்நோய் சமீபத்தில் பரவியிருந்தால், எண்ணெய் தேய்த்துக் குளித்தல் ஆகாது; நெய்யையும் விளக்

கெண்ணெயையும் சேர்த்துக் குளிக்கலாம். வேறு தைலங்களை உபயோகிக்கலாம்.

விஷபேதி:—இந்நோய்க்குக் காரணமான அணுக்கள், காற்றின் மூலமாகப் பரவுவதில்லை; குடிக்குந் தண்ணீரோடு, மனிதர் உடம்பினுள் சேர்கின்றன; பின்பு நோயாளியின் மலத்தின் மூலமாகப் பரவுகின்றன. விஷபேதியைத் தடுக்க வேண்டுமானுல், தண்ணீர் விஷயத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டும். தண்ணீரை நன்ருகக் கொதிக்கக் காய்ச்சி, வடிகட்டி, குடிக்கவேண்டும். உணவைப்பற்றியும் கவனிக்கவேண்டும். பழைய உணவைச் சாப்பிடலாகாது; சூடாயிருக்கும் போது உண்ணுதல் நல்லது. எளிதில் ஜீரணமாகத் தக்க உணவை உண்ணவேண்டும்; வயிறு நிறைய உண்பது நல்லது அன்று. இவ்வாறு ஜாக்கிரதை யாய் இருந்தால், விஷபேதி வாராது.

ப்ளேக்:—ப்ளேக் ஒரு பயங்கரமான நோய். அது, சில ஆண்டுகட்கு முன், கோயம்புத்தூர் ஜில் லாவில் சிலவிடங்களில் பரவியிருந்தது. அதனுல் பலர் இறந்தனர். ப்ளேக்குக் காரணமாயுள்ள அணுக்கள், முதலில் எலிகளைப் பற்றும். அவற் ருல், எலிகள் இறந்துபடும். அப்பொழுது எலிகளை நாசமாக்கவேண்டும். பிளேக்குக்கும், அம்மை குத்திக்கொள்வது உண்டு. அந்நோய் உண்டாகுங் காலத்தில், பிளேக்அம்மை குத்திக்கொள்ளுதல் வேண்டும்.

சில அணுவுயிர்கள், கடும் வெயிலையும் அதிகக் குளிர்ச்சியையும் தாங்கமாட்டா. ஆயினும், அணுக்களின் முட்டைகள் வெயிலினுலாவது பனியினுலாவது அழிதல் இல்லை. அவை, தமக்கு ஏற்ற சீதோஷ்ணம் உண்டாகுங் காலத்தில் பெருகிவிடும். அதனுல்தான், முதல்மழை பெய்தவுடனே விஷஜ்வரம், வயிற்றுக்கடுப்பு முதலிய நோய்கள் உண்டாகின்றன; வெயிற்காலத்தில் வைசூரி பரவுகின்றது.

வைசூரி, விஷபேதி முதலியவை தேவதைகளால் வருகின்றன என்று சிலர் நினைக்கின்றூர்கள். அது தவறு. ஊர்ப்புறத்தையும், நீர் நிலைகளையும், வீடுகளையும் சுத்தமாக வைத்திருந்தால், இந் நோய்கள் பெரும்பாலும் வரமாட்டா.

அருஞ்சொற் பொருள்:

கொதுகு - கொசு.

தேங்கிக் கிடத்தல் - கட்டிக் கிடத்தல்; தங்கியிருத்தல்.

கேள்விகள்:

1. தொத்துநோய் என்பது என்ன? அதற்கு வேறு பெயர் யாது?
2. தொத்துநோய் எவற்ருல் உண்டாகின்றன?
3. மலேரியாஜ்வரம் உண்டாகாமல் தடுப்பதற்கு என்ன செய்யவேண்டும்?
4. விஷபேதி எதன்மூலம் உண்டாகின்றது?
5. முதல்மழை பெய்தவுடன் ஜ்வரம் முதலிய நோய்கள் உண்டாவது ஏன்?

12. பொங்கல்

நாம் கொண்டாடும் பண்டகைகளுள் பொங்கற் பண்டகை ஒன்று. தைமாதம் முதல்தேதியன்று பொங்கற்பண்டகை கொண்டாடுகின்றோம். அது, ஏன்?

சூரியன், கீழ்த்திசையின் வடபகுதியில் ஆறு மாதமும், தென்பகுதியில் ஆறுமாதமும் தோன்றுகின்றான்; சூரியன் வடபகுதியில் இருக்கும் ஆறு மாத காலத்தை உத்தராயணகாலம் என்றும், தென்பகுதியில் இருக்கும் ஆறுமாத காலத்தைத் தக்ஷிணாயனகாலம் என்றும் வழங்குகின்றோம். தக்ஷிணாயனகாலத்தில் மழை சொரியும்; வாடை வீசும்; குளிர் தாக்கும்; பனி வருத்தும். வட இந்தியாவில் பனியும் குளிரும் மிகுதி. அவற்றால் அங்கே மாந்தர் பெரிதும் வருந்துவர்.

மழை, பனி, குளிர் இவற்றால் வருந்தும் மனிதர், வெயிலை வேண்டுதல் இயல்பே. ஆகலின், ஞாயிறு, வடபகுதியில் வரும் நாளை எதிர்நோக்கியிருப்பர்; அதனால், உத்தராயணத்தின் முதல் நாளைக் கொண்டாடலாயினர். அன்றியும், மழைக் காலத்தில் குடியானவர்கள் பயிர் இடுகின்றனர். நெல் முதலியன முற்றி விளைவடைகின்றன. மார்கழி மாதத்தின் கடைசியில், நெல் அறுவடையாகும். மழைக்குக் காரணமாய் இருக்கின்ற சூரியனுக்கு, முதன்முதல் அறுவடையான நெல்லின் அரிசியைப் பொங்கலிட்டுப் படைத்து, வணங்கு

கின்றனர். அதுவே பொங்கற் பண்டகை என்று வழங்குவது. இது சிறந்த செயல் அல்லவா?

பொங்கற் பண்டகைக்கு முந்தின நாளில் 'போகி பண்டகை' கொண்டாடுகின்றோம். அது, தேவேந்திரனைக்குறித்துக் கொண்டாடப்படுகின்றது. மேகங்களுக்குத் தலைவன் இந்திரன் என்று, ஆதிகாலத்தில் எண்ணியிருந்தனர். இந்திரனைக் கொண்டாடினால், அவன், நன்றாக மழை பொழியும்படி முகில்களுக்குக் கட்டளையிடுவான் என்பது நம்பிக்கை. வேண்டுங் காலத்தில் மழை பெய்வித்த இந்திரனுக்கு, விழாச் செய்தனர். இது, செய்நன்றி அறியுஞ் சிறந்த குணம் அல்லவா?

வட இந்தியாவில் உள்ள கோகுலத்தில், முற்காலத்தில் வாழ்ந்திருந்த ஆயர்கள், இந்திரனுக்குப் பூசனை செய்துவந்தனர். அவ்வாறு நடைபெற்று வருகையில், ஸ்ரீகிருஷ்ணர், அவர்களை நோக்கி, 'இந்திரனுக்குப் பூசனை செய்வது ஏன்? நமது ஆனிரைகளுக்கு உணவுகொடுத்துக் காப்பாற்றுவது 'கோவர்த்தனம்' என்னும் மலை யன்றோ? ஆகலின், அந்த மலைக்குப் பொங்கலிட்டுப் பூசனை புரிவது தக்கது' என்று கூறினர். அவர்சொற்படி ஆயர்கள் கோவர்த்தனமலைக்குப் பொங்கலிட்டு வணங்கினர். அதனால், தேவேந்திரன் சினம் கொண்டான்; பெருமழை பெய்து, கோகுலத்தை அழித்துவிடும்படி கார்முகில்களுக்குக் கட்டளையிட்டான். அவ்வாறே ஏழுநாட்கள் விடாது பெருமழை சொரிந்தது. அந்த மழையினின்று, ஆயர்

களையும் ஆக்களையும், ஸ்ரீகிருஷ்ணர் காப்பாற்றினார். இந்திரன் தோல்வி யுற்று, அவரை வணங்கிச் சென்றான். இந்தச் செய்தியினால், பண்டைக்கால முதற்கொண்டே, இந்திரவிழா நடைபெற்று வருகின்றது என்பது நாம் அறியலாகும்.

முற்காலத்தில், நமது தமிழ்நாட்டிலும், இந்திரவிழா நடைபெற்றுவந்தது. காவிரிப்பூம் பட்டினத்தில், சித்திரைமாதத்தில் இருபத்தெட்டு நாட்கள், இந்திரவிழா நிகழ்ந்தது என்பது தெரிகின்றது.

வியவசாயம் நடைபெறுவதற்குக் காரணமாயுள்ள இந்திரனுக்கும் சூரியனுக்கும் பூசனை செய்வதுபோல, ஆனிரைகளுக்கும் பூசனை செய்கின்றனர். அதனை 'மாட்டுப் பொங்கல்' என்று வழங்குகின்றோம். பொங்கலுக்கு மறுநாள், மாட்டுப் பொங்கல் வைக்கிறார்கள். அன்று, மாடுகளைக் குளிப்பாட்டிச் சுத்தம் செய்வர்; தொழுக்களில் பொங்கல் வைத்துப் பூசனை செய்வார்கள்; மாடுகளுக்குப் பழம் முதலிய சிறந்த உணவு கொடுப்பார்கள். சில ஊர்களில் 'மாடுபிடி' என்னும் பந்தயம், சிறப்பாக நடைபெறும்.

பொங்கலுக்குச் சிலநாட்களுக்குமுன்னரே, வீடுகளுக்கு வெள்ளையடிப்பார்கள்; சாமான்கள் எல்லாவற்றையும் நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்வார்கள்; உதவாமல்கெட்டுப்போன பொருள்களை அப்புறப்படுத்துவார்கள்; பழைய மண்பாண்டங்களைக் கழித்துவிடுவார்கள். கிழிந்த துணிகள்,

புறத்தே எறிந்த சாமான்கள் இவற்றை, பொங்க லின் முதல்நாள் இரவில் கொளுத்துவார்கள். அதனால், தெருக்களும் சுத்தம் அடையும். இக் காலத்தில் சில ஊர்களில், நல்ல மரக்கட்டைகளை எரிக்கிறார்கள்; சிலர், விலையுயர்ந்த கட்டை முதலிய வற்றைக் களவுசெய்து கொண்டுபோய் எரித்துவிடு கிறார்கள். இவ்வாறு செய்வது தகுதி அன்று.

பொங்கற் பண்டகையினால், வீடு வாசல்கள், வீட்டுச் சாமான்கள் சுத்தம் செய்யப்படுகின்றன. மாந்தர், உற்சாகமும் சந்தோஷமும் உள்ளவராய் இருக்கின்றனர்; பொங்கலுக்கு மணமக்களை அழைத்து வந்து, கோடியாடை அளித்து, உப சரிக்கின்றனர்; சில ஊர்களில், அன்று, எல்லா ரும் கோடியுடை உடுத்தி இன்புறுகின்றனர்.

அருஞ்சொற் பொருள் :

ஞாயிறு - சூரியன்.
முகில் - மேகம்.
ஆ - பசு.
ஆனிரை (ஆன் + நிரை) - பசுக் கூட்டம்.

கேள்விகள் :

1. பொங்கற்பண்டகை யாரைக் குறித்துச் செய்யப் படுகின்றது?
2. சூரியனுக்குப் பொங்கல் இடுவது ஏன்?
3. போகிபண்டகை என்பது என்ன?
4. மாட்டுப் பொங்கல் வைப்பது ஏன்?
5. பொங்கற்பண்டகையின் நன்மை என்ன?

13. தாதாபாய் நௌரோஜி

தம்நலங் கருதாமல் பிறர்நன்மைக்காக உழைக்கும் பெரியோரே, அழியாத புகழ் பெற்று, நிலை

நிற்பர். அவர் எந்த நாட்டவராயினும், அவரை உலகத்தோர் அனைவரும் பாராட்டுவர். இங்கு, நம் நாட்டில் தோன்றி, நமது நன்மைக்காகப் பாடு

பட்ட பெரியாராகிய **தாதாபாய் நௌரோஜியின்** வரலாற்றைச் சுருக்கமாகக் கூறுவோம்:

தாதாபாய் நௌரோஜி, பம்பாயில், பாரசீகரின் குருமார்குடியில், 1825-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 4-ஆம் தேதியில் தோன்றினர். அவருக்கு நான்காம் வயதில், அவர் தந்தையார் இறந்துவிட்டார். அதனல், அவரை, அவர் அன்னையார் அன்புடன் பேணி வளர்த்தார். அவ்வம்மையார் எழுதப் படிக்கத் தெரியாதவராயினும், குழந்தையை நல்ல முறையில் வளர்த்துவந்தார்; தீய சிறுவர்களுடன் சேராமலும், தீச்செயல் புரியாமலும் காத்துவந்தார். 'என் அன்னையார் சிறந்த அறிவு வாய்ந்தவர்; நான் தீச் செயல் செய்துகெட்டுப்போகாதவாறு என்னைக் கவனித்துவந்தார்; நான் பெண்கல்வியை விருத்தி செய்வதற்கு முயன்றுவந்த காலத்தில், அவர், தம்மால் இயன்றளவு எனக்குத் துணைபுரிந்தார். நான் முன்னேற்றமடைந்து வாழ்தற்குக் காரணராயிருந்தவர் அவரே' என்று, நௌரோஜி எழுதியிருக்கிருர்.

நௌரோஜி, இளமைப்பருவத்தில் ஒரு சிறிய பாடசாலையில் நாட்டுமொழியைக் (குஜரத்தி) கற்ருர். அப்பாடசாலையின் ஆசிரியர், மாலை நேரங்களில், மாணவர்களைத் தெருவில் வரிசையாக நிறுத்தி, மனக்கணக்குப் போடுதல் வழக்கம்.

நௌரோஜிக்கு மனக்கணக்கில் தேர்ச்சி அதிகம். அதனல், ஆசிரியர் கேட்கும் வினக்களுக்

குச் சற்றும் தாமதியாமல், விடைகூறுவார். அங்குச் செல்பவர், அவருடைய கல்வி யறிவினை அறிந்து, அவரைப் பாராட்டுவர்.

நௌரோஜி இளைஞராயிருந்தபோதே, இன்ன இன்ன செயல்களைச் செய்தல் கூடாது என்று தமக்குள் சபதம் செய்து, அவ்வாறே நடந்துவந்தார். அவர், தீய சொற்களைக் கூறுவதில்லை; தம்மைத் தீய சிறுவர்கள் வைதார்களானால், அவர்களை வைவதில்லை; அவர்களை நோக்கி, 'நீங்கள் கூறிய தீச் சொற்கள் உங்கள் வாயில்தான் இருக்கின்றன' என்று சொல்லுவார்.

நௌரோஜி, நாட்டுமொழிப் பள்ளியிற் பயின்று தேர்ந்த காலத்தில், பம்பாய் நகரில் 'சுதேச வித்யா சங்கம்' என்பது ஒன்று நிகழ்ந்து வந்தது. அச் சங்கத்தார், ஆங்கிலக் கலாசாலை ஒன்று ஏற்படுத்தியிருந்தனர். அதில், மாணவர்களுக்கு இனமாகக் கல்வி கற்பித்தனர். நௌரோஜி அந்தக் கலாசாலையிற் சேர்ந்து படித்தார். அதனால் அவர், நாட்டில் அனைவருக்கும் இனமாகக் கல்வி கற்பிக்க வேண்டுமென்று உறுதிகொண்டு, அதன்பொருட்டு, தம் வாழ்நாளில் பலவாறு முயன்றுவந்தார்.

தாதாபாய், ஒருகாலத்தில், கலாசாலையில் தமக்குக் கிடைக்கும் என்று நினைத்திருந்த பரிசில் மற்றொரு மாணவனுக்குக் கிடைப்பதாயிருந்தது. ஆயினும், பரிசு அளிக்குந் தறுவாயில் வினவிய

வினக்களுக்கு அவன் விடைகூற இயலாமல் திகைத்தான். அப்பொழுது தாதாபாய் விரைந்து முன்சென்று, தாமதியாது விடை கூறினர். அதனல், அப் பரிசு அவருக்கே அளிக்கப்பட்டது. குஜராத்தி நீதிநூல்களையும், சிறந்த ஆங்கிலப் புத்தகங்களையும் படித்ததனல், பிற்காலத்தில் தமக்குப் பல நன்மைகள் உண்டாயின என்று அவரே எழுதியுள்ளார்.

தாதாபாய், கலாசாலைக் கல்வி கற்றுத் தேர்ந்தபின், தம் மாதுலரின் உதவியால் 'எல்பின்ஸ்டன்' காலெஜிற் சேர்ந்து கற்ருர். அங்குக் கற்குங் காலத்தில், மாணவர்சங்கம் ஏற்படுத்தி, அதன்மூலமாகப் பத்திரிகை ஒன்று நடத்தி வந்தார்; வேறு சில சபைகளையும் ஆங்காங்கு ஏற்படுத்தி, அவ்விடங்களில் உபந்யாசம் புரிந்து, மாந்தர்க்கு அறிவூட்டிவந்தார். ஒருகால், மாணவர் சங்கத்தில் ஒருவர், பெண்கல்வியைக்குறித்து, ஒரு கட்டுரை எழுதி வாசித்தார். அப்பொழுது அக் கல்லூரித்தலைவர், 'சொல்வதுமட்டும் போதாது. இயன்ற அளவு முயன்று பெண்கல்வியைப் பரவச் செய்யவேண்டும்' என்று கூறினர். நெளரோஜி அந்த அறிவுரையை மேற்கொண்டு, அதற்காகப் பாடுபட்டார். பெண்கல்வியை முதல் முதல் நிலைநாட்டியவருள் நெளரோஜியும் ஒருவர்.

தாதாபாய், கல்லூரிப்படிப்பு முடிந்தபின், குஜராத்திமொழியில் வாரப்பத்திரிகை யொன்று

நடத்திவந்தார். அதில், ஆசாரம் முதலியவற்றின் சீர்திருத்தங்களைப்பற்றிப் பல கட்டுரைகளை எழுதினார். பம்பாய்மாகாணத்தில், முதல்முதலில், தேச பாஷையில் பத்திரிகை நடத்தியவர் தாதாபாயே.

நௌரோஜி, தாம் கல்வி கற்ற கல்லூரியில் 1854-ஆம் ஆண்டில் கணிதநூற் பேராசிரியர் பதவியில் அமர்ந்தார். அக் கல்லூரி ஆசிரியர்களுள், தாதாபாயே முதன்முதலில் நியமனம் பெற்ற இந்திய ராவர்.

நௌரோஜி ஆசிரியராய் இருந்த காலத்தில், பம்பாயிலிருந்த பெரிய வர்த்தகசாலையினர், லண்டன்நகரில் ஒரு கிளைச்சாலையை ஏற்படுத்தினர். அதில் காரியதரிசியா யிருக்கும்படி அவரை வேண்டிக்கொண்டனர். அதனால் அவர், லண்டன் நகருக்குச் சென்று, அங்கு வசித்துவந்தார். அக் காலத்தில் அவர், தேச ஊழியம் செய்ய எண்ணங் கொண்டு, லண்டனில் ஒரு சங்கம் அமைத்தார். அதன்மூலமாக இந்தியாவின் குறைகளை ஆங்கிலேயர்களுக்கு எடுத்துக் கூறினர்; பத்திரிகைகளிலும் நமது தேச நிலைமையைக்குறித்துப் பல கட்டுரைகள் எழுதினர்.

அக்காலத்தில், தாதாபாய், லண்டன் நகரிலுள்ள சர்வகலாசாலைக் கல்லூரியில், குஜராத்தி மொழிப் பேராசிரியராய் அமர்ந்தார். இங்கிலாந்தில் இருக்குங் கல்லூரிகளில், ஆசிரியராக நியமனம் பெற்ற இந்தியர்களுள், அவரே முதல்வர்.

நௌரோஜி, லண்டனிலிருந்து, 1869-ஆம் வருடத்தில் பம்பாய்க்கு வந்தபொழுது, அந்நகரத்தவர், அவர் செய்த தேச ஊழியத்தைப் பாராட்டி, அவருக்கு முப்பதினாயிரம் ரூபாய் சம்மானமாக வழங்கினர். அவர், அத் தொகையிலிருந்து ஒரு சிறிதும் தமக்கு உபயோகப்படுத்திக் கொள்ளவில்லை; மாந்தர்களின் நன்மைக்காகவே அதனைச் செலவிட்டார்.

1874-ஆம் வருடத்தில், நௌரோஜி, பரோடா தேசத்தில் திவான் பதவியில் அமர்ந்தார். அக்காலத்தில் இருந்த அரசியல் நிலைமையையும், அதிகாரிகளின் தன்மையையும், மாந்தர்களின் துன்ப வாழ்க்கையையுங் கண்டு, மனம் பொறாமல், அப்பதவியினின்றும் நீங்கினார். அப்பொழுது வேறு பல அரசர்கள் விரும்பி யழைத்தனர். அவர் எங்கும் செல்லவே இல்லை.

தாதாபாய் பம்பாய் நகரபரிபாலனசபையிலும், சட்டசபையிலும் உறுப்பினராய் இருந்து, பல நன்மைகள் செய்தார். 1885-ல் ஏற்படுத்தப்பட்ட காங்கிரஸ் மகாசபைக்கு, அவர் பெரிதும் முயன்று உழைத்தார்.

பின்பு, நௌரோஜி இங்கிலாந்துக்குச் சென்று, பார்லிமெண்டில் பொதுஜன சபையில் (காமன்ஸ் ஸபை) ஓர் உறுப்பினர் ஆனார்; அங்கு, ஆங்கிலேயர்களுக்கு இந்தியாவின் நிலைமையை எடுத்துக்கூறினார். அதனால், இந்தியாவின் வரவு

செலவுகளைப்பற்றி ஆராய்வதற்கு ஒரு சபை ஏற்படுத்தப்பட்டது. அதில் நௌரோஜியையும் நியமித்திருந்தனர்.

பின்னர், தாதாபாய், லாகூரிலும் கல்கத்தாவிலும் நடைபெற்ற காங்கிரஸ் சபைகளுக்குத் தலைவராய் இருந்தார். மாந்தர் அனைவருக்கும் இனாமாகக் கல்வி கற்பிக்கவேண்டும் என்றும், சுய ஆட்சி பெற முயலவேண்டும் என்றும், அவர் வற்புறுத்திக் கூறினர்.

தாதாபாய், தாம் செய்யவேண்டிய செயல்களையெல்லாம் முறைப்படுத்திக்கொண்டு, தவருமல் செய்துவருவார்; உணவு உறக்கம் முதலியவற்றிலும் நியமம் தவறமாட்டார்; குறித்த காலத்தில் பத்திரிகை வாசித்துவருவார். அவர், தமது சிறந்த நூல்நிலையை, பம்பாய் மாகாணச் சங்கத்திற்கு இனாமாக நல்கினர். தம் வாகனங்களை நண்பர்களுக்குக் கொடுத்துவிட்டு, அவர், காலால் நடந்து செல்லுவார். அவரது அன்பும் பண்பும் என்னே!

நௌரோஜியின் பரோபகார குணத்தையறிந்து, மாந்தர், அவரை 'இந்தியப் பெரு முதியோர்' என்று பெயரிட்டு வழங்கி வந்தனர். அவர், 1917-ஆம் வருஷம் ஜூன் மாதம் 30-ஆம் தேதியில் மேலுலகம் அடைந்தார். அவருடைய புகழ் அழியாமல் நின்று நிலவுகின்றது.

அருஞ்சொற் பொருள் :

நிகழ்ந்து - நடைபெற்று. பரிசில் - வெகுமதி.

தறுவாய் - சமயம்.
நூல்நிலை - புஸ்தகாலயம்; லைபிரெரி.
மாதுலர் - தாயுடன் பிறந்தவர்.
பண்பு - குணம்.

கேள்விகள் :

1. தாதாபாய் இளமையிலேயே நல்லவராயிருந்தார் என்பதற்கு ஓர் உதாரணம் சொல்லுக.
2. தாதாபாய் லண்டனிலிருந்தபோது நம் நாட்டுக்காக என்ன செய்தார்?
3. தாதாபாயின் உதாரகுணத்தை விளக்க ஓர் உதாரணம் தருக.

14. ஊர்திகள்

I

நாம் ஓர் ஊரிலிருந்து, நெடுந்தொலையில் இருக்கும் மற்றோர் ஊருக்குப் போகவேண்டுமானல், ரெயில் வண்டியில் போகின்றோம்; கடலைக் கடந்து செல்ல வேண்டுமானல், நீராவிக் கப்பலில் பிரயாணஞ் செய்கின்றோம். ஆனல், இவையெல்லாம் சமீப காலத்தில் ஏற்பட்டவை.

ஆதிகாலத்தில் மனிதர்கள், வேறு இடங்களுக்கு நடந்தே போயிருப்பார்கள் என்று கருதுதல் தகும். அதன்பின், அவர்கள், எருது குதிரை

முதலியவற்றைப் பழக்கி, அவற்றின்மேல் ஏறிச் சென்றிருப்பர்; நெடுங்காலத்தின் பின்னரே, வண்டி முதலிய ஊர்திகளை அமைத்திருக்கக் கூடும்.

நம் நாட்டில், முற்காலத்தில் சாதாரணமாக மாட்டுவண்டிகளில் பிரயாணம் செய்தனர்; பண்டங்களையும் அவற்றில் ஏற்றிக்கொண்டு போதல் உண்டு. இச்செய்தி, பழைய தமிழ்நூல்களில் பலவிடங்களில் கூறப்பட்டுளது.



மாட்டுவண்டியில் பலவகை உள்ளன. சாதாரணமான வண்டியில் சாமான்களைக் கொண்டு போகின்றனர். கிராமவாசிகள், அந்த வண்டியில் கூண்டு அமைத்துக்கொண்டு பிரயாணம் செய்வது உண்டு. வண்டிகளுள் வில்வண்டியே பிரயாணத்திற்கு ஏற்றது. சிலர், பெட்டிவண்டியில் செல்கின்

றனர். அதில், உட்கார்ந்திருப்பதற்கு ஆசனம் உண்டு. பின்பக்கத்தில் கதவு இருக்கும். அதைச் சார்த்தி, தாழ் இட்டுக்கொள்ளலாம்.

வண்டியில் ஒற்றை எருதினைப் பூட்டிச் செலுத்துதல் உண்டு. அதனை ஒற்றைமாட்டு வண்டி என்பர்.



பெரிய கிராமங்களிலும், நகரங்களிலும், குதிரைவண்டிகள் உபயோகப்படுகின்றன. குதிரை விரைந்து ஓடுமாகலின், விரைவிற் செல்ல விரும்புபவர், குதிரைவண்டியில் செல்லுவர். குதிரைவண்டியில் பலவகை உள்ளன. சாதாரணமாக உபயோகப்படுவது ஜட்காவண்டியே. செல்வர்கள், கோச்சு வண்டி என்னுஞ் சிறந்த வண்டியில் செல்லுகின்றனர்.

சில வண்டிகளில் இரண்டு குதிரைகளைப் பூட்டிச் செலுத்துதல் உண்டு. அரசர் முதலியோர் நான்கு குதிரைகளைப் பூட்டிய வண்டியில் செல்லுவர்.

இக்காலத்தில், மோட்டார்வண்டியே பிரயாணத்திற்கு அதிகப் பயன்படுகின்றது. பிரயாணிகள்பலரை ஏற்றிக்கொண்டு செல்லும் மோட்டார் வண்டிக்கு, 'பஸ்' என்று பெயர். 'பஸ்' ஸில் நெடுந்தூரஞ் செல்வது கஷ்டம். அன்றியும், பஸ் ஓட்டுபவரின் கவலைக்குறைவினல் அபாயமும் நேர்கின்றது.

சாமான்களை ஏற்றிச் செல்வதற்கும் மோட்டார் வண்டி உதவுகின்றது. அந்த வண்டியை 'லாரி' என்று வழங்குவர். பெருஞ்செல்வர்



'மோட்டார்கார்' வைத்திருக்கின்றனர். 'கார்' மிக்க விரைவாகச் செல்லும். நகரங்களில் மோட்டார் கார்கள் வாடகைக்குக் கிடைக்கும். அதற்குப் பணம் அதிகம் கொடுக்கவேண்டும்.

நெடுந்தூரம் பிரயாணம் செய்பவர், ரெயில் வண்டியில் செல்கின்றனர். ரெயில் வண்டியை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? ரெயில்வண்டி, தரைமேல் செல்லாது. தரையின்மேல் பாதை அமைத்து, இரண்டு தண்டவாளங்களைப் பதித்திருப்பர். தண்டவாளங்களின்மேல் சக்கரங்கள்



சுழன்று செல்லும். அதனால், ரெயில் வேகமாகச் செல்லுகின்றது. ரெயில் வண்டியில் பிரயாணம் செய்வது நல்லது; வேண்டும் வசதிகள் அதில் உள்ளன; பெரும்பாலும் ஆபத்து ஏற்படுதல் இல்லை.

சாமான்களையும், மாடு குதிரை முதலிய பிராணிகளையும், கொண்டு செல்லுதற்கு வேறே ரெயில் வண்டிகள் உள்ளன.

சென்னபட்டணத்தில் 'ட்ராம் வண்டி' என்னும் ஒருவகை வண்டி இருக்கின்றது. அது, நகரில் பல இடங்களுக்குச் செல்கின்றது. ட்ராம் வண்டியும் தண்டவாளத்தின்மேல்தான் செல்லும்.



அதனல், வழியில் ஆபத்து உண்டாதல் இல்லை. ட்ராம்வண்டியில் செல்வது சௌகர்யமாய் இருக்கும்.

'ரிக்ஷா' என்னும் ஒருவகை வண்டி சென்னபட்டணம் முதலிய சில நகரங்களில் இருக்கின்றது. அதில், சாதாரணமாக ஒருவர்தாம் செல்லலாம். ரிக்ஷா வண்டியை, மனிதன் இழுத்துச்செல்கின்ருன். ரிக்ஷாவின் சக்கரத்தின்மேல் ரப்பரை அமைத்திருப்பதனல், அது, விரைவாகச் செல்லுகிறது. அதனை இழுத்துச்செல்வது அதிக கஷ்டம் அன்று.

மேற்கூறிய வண்டிகளைத் தவிர, 'பைஸிகில்' என்னும் வண்டி ஒன்று இருக்கின்றது. அதில் ஒருவர்தாம் செல்லலாம். பைஸிகிலுக்கு இரண்டு சக்கரம் உண்டு. அவை ஒன்றன்பின் ஒன்ருய்



இருக்கும். பைஸிகிலில் செல்லுபவர் காலால் மிதித்துச் சக்கரத்தைச் சுழற்றவேண்டும். ஆதலால், பைஸிகிலில் நெடுந்தூரம் செல்ல முடியாது; சமீபத்தில் உள்ள இடத்திற்கு எளிதில் செல்லலாம். அதனுல், பெரிய கிராமங்களிலும் நகரங்களிலும் வசிப்பவர் பலர் இதனை உபயோகிக்கின்றனர்.

'மோட்டார் ஸைகில்' என்று ஒருவகை வண்டி உளது. அதில் யந்திரம் அமைந்துளது. அதனுல்,

அது மிக்க வேகமாகச் செல்லும். அதிற் செல்ப



வர், காலால் மிதித்துச் சக்கரத்தை சுழற்ற வேண்டுதல் இல்லை.

தரையில் பனிக்கட்டிகள் உறைந்திருக்கும் இடங்களில் 'ஸ்லெட்ஜ்' என்னும் ஒருவகை வண்டி செல்லுகின்றது. அந்த வண்டிக்குச் சக்கரங்கள் இல்லை. வண்டியில், நாயையாவது மானையாவது பூட்டிச் செலுத்துவர்.

II

தரையிற் செல்லும் ஊர்திகளைப்பற்றி இதுவரையும் கவனித்தோம்; இனி, நீர்மேற் செல்லும் ஊர்திகளை நோக்குவோம்:

ஆறுகளில் வெள்ளம் வருங் காலத்தில் பரிசு அல்லது படகில் ஏறிச்செல்லுவர்; நெடுந்தூரஞ் செல்லும் பெரிய கால்வாய்களில் படகுகளில் பிரயாணஞ் செய்வர். படகுகளில் பெரும்பாலும் வியாபாரச் சாமான்களை அனுப்புகின்றனர். முற்காலத்தில் கடலிலும் படகைச் செலுத்திவந்தனர். சிறிய கப்பலில் பாயை விரித்துக்கட்டிச் செலுத்துவர். அதனால், அதற்குப் 'பாய்மரக் கப்பல்' என்று பெயர் வழங்கிற்று. காற்று அனுகூலமாக வீசினால், கப்பல் விரைந்துசெல்லும்; எதிர்க்காற்று



வீசினால், செல்லுதல் அரிது. சில சமயங்களில் புயற்காற்றினால் அபாயம் நேர்தலும் உண்டு. ஆயினும், நம் முன்னோர் அக் கப்பல்களில் நெடுந் தூரஞ் சென்று, பிற நாடுகளில் வாணிகஞ் செய்து வந்தனர். அவருடைய திறமையும் அஞ்சாமையும் பாராட்டத்தக்கன.

இக்காலத்தில் கப்பல்கள் நீராவியந்திரத்தால் செல்கின்றன. கப்பல்கள் மிகப் பெரியன

வாகச் செய்யப்பட்டுள்ளன. அதில் பன்னூறு மனிதர்கள் இருக்கவும், ஏராளமான சாமான்களை வைக்கவும் போதிய இடம் இருக்கின்றது. கப்பலில் பெரும்பாலும் ஆபத்து நேர்தல் இல்லை. ஆதலால், பல்வேறு தேசங்கட்குச் செல்பவர், அச்சமின்றிக் கப்பலில் பிரயாணம் செய்கின்றனர்.

இக்காலத்தில், ஆகாயத்தின் வழியாயும் போக்குவரத்து நடைபெறுகின்றது. ஆகாயத்தில் பறந்துசெல்வதற்காகப் பலர் முயன்றுவந்தனர்; சுமார் நூற்றைம்பது ஆண்டுகள் இம் முயற்சி நடைபெற்றது. அமெரிக்காவில், ஓஹியோ நாட்



டில், டெயிடன் என்னும் பட்டணத்தில் இருந்த ஓர்வில்ரைட், வில்பர்ரைட் என்னுஞ் சகோதரர் இருவர், இதில் நாட்டங் கொண்டனர். அவர்கள், பெரிய படிப்பாளிகள் அல்லர்; ஆயினும், பொருள்களைக் கூர்ந்து நோக்குந் திறமை வாய்ந்தவர்; எந்தச் சாமானையும் செய்யக்கூடிய ஆற்றல் உள்ள

வர். அவர்கள், 1903-ஆம் ஆண்டில், ஆகாயவிமானம் ஒன்று செய்தார்கள். அது மணி ஒன்றற்கு முப்பதுமைல்தூரம் செல்லக்கூடியதாய் இருந்தது. இப்போதுள்ள ஆகாயவிமானம் மணிக்கு முந்நூறுமைல்தூரம் செல்லும். ஆகாயவிமானத்தில், பலர் பிரயாணம் செய்கின்றார்கள். நமது நாட்டில் சில நகரங்கட்கு அதன் மூலமாகத் தபால் வருகின்றது. ஆகாயவிமானமே யன்றி, ஆகாயக்கப்பல் என்று ஒரு வாஹனம் உளது. அஃது ஏறக்குறைய படகுபோல் இருக்கும். அதில், ஐம்பது பிரயாணிகள் ஏறிச் செல்லலாம்.

ஆகாயப் போக்குவரத்து அபிவிருத்தியாகி வருகின்றது. நமது தேசத்திலும், சில காலத்தில், ஆகாயவிமானப் போக்குவரத்து ஏற்படக்கூடும். அப்பொழுது, நெடுந்தூரத்தில் உள்ள ஊர்களுக்கும் சில மணி நேரத்திற் போய்த் திரும்பலாம்.

அருஞ்சொற் பொருள் :

புயற்காற்று - மழைக்காற்று. பரிசு - சிறு ஓடம்.

கேள்விகள் :

1. தண்டவாளத்தில் செல்லும் வண்டிகள் எவை?
2. ரிக்ஷா வண்டியைப் பற்றிக் கூறுக.
3. பைஸிகிலுக்கும் மோட்டார்ஸைகிலுக்கும் உள்ள வித்யாசம் என்ன ?
4. பாய்மரக்கப்பலைக் குறித்துச் சொல்லுக.
5. ஆகாயவிமானத்தை முதலில் செய்தவர் யாவர் ?

15. *வந்தேமாதரம் (பாட்டு)

வந்தே மாதரம் என்போம்—எங்கள்
மாநிலத் தாயை வணங்குதும் என்போம்.

1. ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜன்மமித் தேசத்தில் எய்தின ராயின்
வேதிய ராயினும் ஒன்றே—அன்றி
வேறு குலத்தின ராயினும் ஒன்றே. (வ)

2. ஆயிரம் உண்டிங்கு ஜாதி—எனில்
அன்னியர் வந்து புகல்என்ன நீதி—ஓர்
தாயின் வயிற்றில் பிறந்தோர்—தம்முள்
சண்டைசெய் தாலும் சகோதரர் அன்றோ? (வ)

3. ஒன்றுபட் டால்உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம்வந் தாற்பின் நமக்கெது வேண்டும். (வ)

4. எப்பதம் வாய்த்திடு மேனும்—நம்மில்
யாவர்க்கும் அந்த நிலைபொது வாகும்
முப்பது கோடியும் வாழ்வோம்—வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம். (வ)

சுப்ரமணிய பாரதியார்.

---

*பாரதி பிரசுராலயத்தார் அனுமதி பெற்றுப் பதிப்பிக்கப்பட்டது.

6

16. மாதவ கோவிந்த ரானடே

ரானடே என்னும் மரபினர், பம்பாயில் ரத்னகிரி ஜில்லாவில் வாழ்ந்துவந்தனர். அம்மரபில் பகவந்தராயர் என்பவர் பண்டரபுரத்தில் தங்கியிருந்தார். அவருடைய பேரன்மார்களுள் கோவிந்தராயர் என்பவருக்கு, 1842-ஆம் வருடம் ஜான்யுஅரி மாதம் 18-ஆந் தெய்தியில் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அதற்கு மாதவர் என்று பெயர் இட்டனர். அந்தக் குழந்தையே நம் மாதவ கோவிந்த ரானடே.

மாதவர் இளமையிலேயே சிறந்த நற்குணம் உள்ளவராய் இருந்தார். ஒருநாள், அவர் தாயார் இனிய தின்பண்டம் இரண்டனை அவர் கையில்

கொடுத்து, 'இவற்றுள் ஒன்று நீ எடுத்துக்கொள்; ஒன்று உன் நண்பனுக்குக் கொடு' என்றார். மாதவர், அவ்விரண்டனுள் பெரியதை நண்பனுக்குக் கொடுத்துவிட்டு, சிறியதைத் தாம் தின்றார். அதை அறிந்த அவர்தாயார், மகன் குணத்தை நினைத்து மகிழ்ந்தார்.

மாதவர் இருந்த வீட்டின் மேல்மாடியில் இருந்த சிறுவர்கள், தாங்கள் பரீக்ஷையில் எழுதிய விடைகளைப் பெற்றோரிடம் சொல்லி மகிழ்வார்கள். ஒருநாள், மாதவர்தாயார், மாதவரை நோக்கி 'அந்தச் சிறுவர்கள் தங்கள் திறமையைக்குறித்து எவ்வளவோ சொல்லுகிறார்கள்; நீ ஒன்றுமே சொல்வதில்லையே' என்று சொன்னார். அதற்கு மாதவர், 'அம்மா, நாள்தோறும் பாடசாலைக்குப் போகிறோம்; படிக்கிறோம்; பரீக்ஷையில் தேர்ச்சி பெறுகிறோம். இதில், என்ன பெருமை இருக்கிறது? ஆச்சரியமான செய்தியானால் சொல்லாதிருப்பேனா?' என்று கூறினார்.

மாதவர் வெளியே போகும்போது, தம் கழுத்தில் அணிந்திருந்த பொற்சரட்டையும், கையில் தரித்திருந்த கடகத்தையும் சட்டைக்குள் மறைத்துக்கொண்டு போவார். அது கண்ட உறவினர், 'ஆபரணத்தின் அழகைப் பார்க்கத்தானே உன் தாயார் அவற்றைப் பூட்டியிருக்கிறார். நீ ஏன் மறைத்துக்கொண்டு போகிறாய்?' என்று கேட்பர். மாதவருக்கு அதில் விருப்பம் இல்லை.

மாதவர் ஞாபகசக்தி உடையவர். அவர், படிக்குங் காலத்தில் பல பரிசுகளையும், உபகாரச் சம்பளத்தையும் பெற்றார். அவர், இருபதாம் வயதில் பி. ஏ. பரீக்ஷையில் தேர்ச்சி யுற்றார். பின்னர், எம். ஏ, பரீக்ஷையிலும் வெற்றி பெற்றார்.

மாதவர் பி. ஏ. யில் தேர்ந்தபின், முதலில் பத்திரிகாசிரியராய் இருந்தார்; பின்னர், கல்லூரியில் ஆசிரியராய் அமர்ந்தார். அவரது திறமையை அறிந்த ஐரோப்பிய ஆசிரியரும் மற்ற ஆசிரியரும் அவருக்கு 300 ரூபாய் பெறுங் கடியாரம் ஒன்று வழங்கினர்.

1871 - ஆம் வருடத்தில், மாதவர் வக்கீல் பரீக்ஷையில் தேர்ந்தார். அதனால், அவர், புனாநகரத்தில், முதல்வகுப்பு உதவி நீதி (ஸப் ஜட்ஜ்) ஆக நியமனம் பெற்றார். அவர், நியாயத்தில் சிறிதும் தவறமாட்டார். ஒருகால், அவர்தந்தையார், தம் நண்பர் ஒருவரை அழைத்துக்கொண்டு அவரிடஞ் சென்றார். அவர், தந்தையை நோக்கி, 'தாங்கள் இவ்வாறு ஈடுபடுவது நன்றன்று' என்று கூறி, அனுப்பிவிட்டார்.

மாதவர், பெண்கல்வியில் மிக்க ஊக்கம் உள்ளவர். அவர், தம் மனைவிக்குத் தாமே தாய்மொழியைக் கற்பித்தார்; பின்பு ஆங்கிலமும் போதித்தார். மாதவர், மனைவிக்குக் கற்பிப்பது அவர்வீட்டில் இருந்த மற்றப் பெண்களுக்குச் சம்மதமில்லை.

அவர்கள், மாதவர்மனைவியை வைவர்; பரிகாசம் செய்வர்; இகழ்ந்து கூறுவர். மாதவர், அவர்கள் சொல்வதை அறிந்தும் அமைதியாய் இருந்துவிடுவர். ஒருநாள் மாதவர், மனைவியை நோக்கி, 'வீட்டில் இருக்கும் பெண்கள் உன்னை வருத்துவது எனக்குத் தெரியும். இன்னும் சிலகாலம் இப்படித்தான் இருக்கும். நீ அவற்றையெல்லாம் பொறுத்துக்கொள்ள வேண்டும். பொறுமையில் பழகுவதற்கு இது நல்ல சமயம். உனக்கு மகிழ்ச்சி உண்டாகும் காலம் வரும். வருந்தாதிரு' என்று கூறினார். அவர்மனைவியும், விடாது கல்வி கற்றார்.

1893-ல் மாதவர் ஹைக்கோர்ட்டு நீதிபதி ஆனார்; தமது தொழிலைத் திறம்பெற நடத்திவந்தார். அவர், தமது உடல்நலத்தையும் கருதாமல் வேலை செய்து முடிக்கும் இயல்பு உள்ளவர்.

மாதவர் தெய்வபக்தி உள்ளவர். ஒருநாள் அவர், தமக்குத் தெரியாமலே ஓர் அபாயத்தினின்று தப்பினார். பின்பு, அவர் சொல்லியது: 'உண்மையான பக்தி உள்ளவர்கட்கு ஒரு வித ஆபத்தும் வாராது. நான் கடவுளை நம்பியிருப்பவன்; அவர் என்னைக் கைவிடமாட்டார். கடவுள் மீது பொறுப்பு வைத்துத் தமது காரியம் செய்பவருக்கு ஒரு குறைவும் வாராது.'

நண்பரொருவர், நல்ல ஜாதி மாம்பழங்களை மாதவருக்கு அனுப்பினார். மாதவர்மனைவி, அவற்றுள் ஒரு மாம்பழத்தை அறுத்து, அவரிடம் கொடுத்தாள். அவர் ஒரு துண்டு எடுத்துத் தின்று,

'இது ருசியாய் இருக்கிறது. நீங்கள் தின்னுங்கள்; வேலைக்காரருக்கும் கொடுங்கள்' என்றார். அவர் மனைவி, 'இது மிக்க சுவையாய் இருக்கின்றது. இன்னுஞ் சில துண்டு தின்னுங்கள்' என்றாள். அதற்கு அவர், 'இது, அதிகச் சுவையாயிருப்பதனால்தான் நான் அதிகம் தின்னவில்லை; எல்லாருக்கும் கொடுக்கச் சொன்னேன். நாக்கை இஷ்டப்படி விடக் கூடாது. அதனை அடக்கியாளவேண்டும். அதன் விருப்பப்படி நடந்தால், கஷ்டகாலம் வரும்போது வருந்தும்படி நேரும்' என்று கூறினார்.

ஒருநாள் அவர், தம் மனைவிக்குக் கூறியது: 'நாம் இரவில் படுக்கும்பொழுது, அன்று செய்த காரியங்களின் நன்மை தீமைகளை ஆராயவேண்டும். தீமை என்று தெரியுங் காரியங்களை விட்டுவிட வேண்டும். இவ்வாறு பழகுவது முதலில் கஷ்டமாயிருக்கும். விடாமல் பின்பற்றி வந்தால் மனம் வசப்பட்டுவிடும்'.

மாதவர் தேசாபிமானம் மிக்கவர். அவர், தேச நன்மைக்காகப் பாடுபட்டார்; காங்கிரஸ் சபை நடக்கும்போது பலமுறை சென்று, வேண்டுவன செய்தார். அவர், பொதுநன்மைக்காகப் பெருந் தொகையை உதவியிருக்கிறார்.

மாதவர், காலத்திற்கு ஏற்ற சீர்திருத்தங்களில் விருப்பம் உள்ளவர். ஆயினும், பிறருக்கு வருத்தம் உண்டாகுமாறு நடந்துகொள்ளமாட்

டார். அதனால், அவரை அறிஞர் எல்லாரும் பாராட்டுகின்றனர். அவருடைய புகழ் எந்நாளும் நிலைநிற்கும்.

அருஞ்சொற் பொருள் :

மரபினர் - வம்சத்தினர். கல்லூரி - காலெஜ்.
கடகம் - காப்பு.

கேள்விகள் :

1. மாதவர் நற்குணத்துக்கு ஓர் உதாரணம் தருக.
2. மாதவர் ஆடம்பரத்தை வெறுத்தவர் என்பது எதனால் அறியலாகும்?
3. அவர் நியாயம் தவறார் என்பது எதனால் விளங்கும்?
4. மாம்பழத் துண்டுகள் அதிகமாகத் தின்னும்படி சொன்ன மனைவிக்கு, மாதவர் கூறியது யாது?
5. படுக்கும்பொழுது ஆராய வேண்டுபவை யாவை?

17. சந்திரன்

வானத்தில் இருக்கும் எண்ணிறந்த மண்டலங்களுள், பூமிக்கு அருகில் இருப்பது சந்திர மண்டலமே. அது, பூமியைச் சுற்றிவருகின்றது. சந்திரனுக்கும் பூமிக்கும் இடையில் உள்ள தூரம் 2,40,000 மைல் என்று கணக்கிட்டிருக்கின்றனர்.

சந்திர மண்டலத்தின் குறுக்களவு 2,160 மைல். சந்திரனைப்போல் ஐம்பது கோளங்கள் சேர்ந்தால், நமது பூமிக்குச் சமமாகும். பூமியைப்போல் பதின் மூன்று லக்ஷம் கோளங்கள் சேர்ந்தால், சூரிய மண்டலத்துக்குச் சமமாகும். ஆதலால், ஆறரைக் கோடி சந்திரமண்டலம் சேர்ந்தால், சூரிய மண்ட



லத்தின் அளவிற்குச் சமமாகும் என்பது விளங்கும். ஆயினும், சந்திரன் நமக்கு அருகில் இருப்பதனாலும், சூரியன் ஒன்பது கோடி மைலுக்கும் மேற்பட்ட உயரத்தில் இருப்பதனாலும், சந்திரன், பார்வைக்கு, சூரியனளவில் தோன்றுகின்றது.

நமது பூமியில் இருப்பதுபோல, சந்திர மண்டலத்திலும் மலைகளும் சமவெளிகளும் உள்ளன. அம் மலைகள் இரண்டு மைல் உயரம் இருக்கின்றன என்று அறிந்திருக்கின்றனர். மலைகளின்

அடிவாரங்களில், பாறைகளும் பெருங்கற்களும் வீழ்ந்து கிடக்கும். சந்திரனில் ஒளி குறைந்துள்ள பாகங்கள் பெருவெளியான இடங்கள் எனத் தெரிகின்றது.

சந்திரனுக்கு இயல்பாக வெளிச்சம் இல்லை. அதற்குச் சூரியனிடமிருந்து ஒளி கிடைக்கின்றது. சந்திரனுக்கு இயல்பில் ஒளி இருக்குமாயின், அஃது எப்பொழுதும் வட்ட வடிவமாயே தோன்றக்கூடும். சந்திரனுக்கும் சூரியனுக்கும் இடையே பூமி இருக்கும்போது, அதன் வெளிச்சமான பகுதி முழுவதும் பூமிக்கு நேரே இருக்கின்றது. அதை, பூரண சந்திரன் என்று சொல்லுகின்றோம். சந்திரன் பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் இருக்கும்போது, சந்திரனுடைய இருண்ட பக்கம் பூமிக்கு நேரே இருக்கின்றது. அதனால், சந்திரன் நமக்குத் தெரிகின்றதில்லை. அந்த நாளை அமாவாஸ்யை என்று வழங்குகின்றோம்.

அமாவாஸ்யையின் மறுநாள்முதல் பௌர்ணமிவரை சந்திரனுடைய வெளிச்சமான பக்கம், சிறிது சிறிதாகத் தோன்றிக்கொண்டே வரும். மூன்றும் நாள் ஒரு கீற்று வடிவம் தோன்றும். அதனைப் ‘பிறை’ என்று சொல்வார்கள். பிறையைத் தொழுவது வழக்கம். சந்திரன் அவ்வாறு வளர்ந்துவருங் காலத்தை ‘வளர் பிறை’ என்று சொல்லுகிறோம். அதைச் சுக்கில பக்ஷம் என்று சொல்வதும் உண்டு.

பௌர்ணமியன்று நிலா நன்ருக எறிக்கும். அன்று, கடலில் நீர் அதிகமாய்ப் பொங்கும். சிறுவர்கள் உற்சாகமாய் விளையாடித் திரிவார்கள்.

பௌர்ணமியின் மறுநாள்முதல் அமாவாஸ்யைவரை, சந்திரனது வெளிச்சமான பாகத்தின் தோற்றம் சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டே வரும். அவ்வாறு சந்திரன் தேய்ந்து வருங் காலத்தைத் 'தேய் பிறை' என்று சொல்கிருேம். அதைக் 'கிருஷ்ண பக்ஷம்' என்று சொல்வதும் உண்டு.

சந்திரன் பதினைந்து நாள் வளர்வதுபோலவும், பதினைந்து நாள் தேய்வது போலவும் நமக்குத் தோன்றினும், உண்மையில் சந்திரன் வளர்வதும் இல்லை; தேய்வதும் இல்லை.

சந்திரன் உதித்தவுடனே ஆம்பற்பூ விரியும்; தாமரை குவிந்துவிடும். அதனல், சந்திரனைக் குமுதத்தின் நண்பன் என்றும், தாமரையின் பகைவன் என்றும் கூறுவர்.

சந்திர மண்டலத்தில் ஒளி குறைந்த பாகத்தைக் களங்கம் என்று சொல்லுவது உண்டு. புலவர்கள், அதை, மான் என்றும் முயல் என்றும் வருணித்துக் கூறுவர்.

சந்திரன், ஒருமுறை பூமியைச் சுற்றிவருவதற்கு 28 நாட்கள் ஆகும். அந்தக் காலத்தை ஒரு மாதம் ஆகக் கொள்ளலாயினர். அதனல்தான், மாதத்திற்குத் 'திங்கள்' என்று பெயர் வந்தது.

அமாவாஸ்யையின் மறுநாள்முதல் அடுத்த அமாவாஸ்யைவரை ஒரு மாதமாகக் கணக்கிடுவது வழக்கம். தெலுங்கு தேசம் முதலிய வட தேசத்தில், இவ் வழக்கமே இன்றும் உளது.

வளர்பிறை நாட்கள் 15	தேய்பிறை நாட்கள் 15
பிரதமை	பிரதமை
துவிதியை	துவிதியை
திருதியை	திருதியை
சதுர்த்தி	சதுர்த்தி
பஞ்சமி	பஞ்சமி
சஷ்டி	சஷ்டி
சப்தமி	சப்தமி
அஷ்டமி	அஷ்டமி
நவமி	நவமி
தசமி	தசமி
ஏகாதசி	ஏகாதசி
துவாதசி	துவாதசி
திரயோதசி	திரயோதசி
சதுர்த்தசி	சதுர்த்தசி
பௌர்ணமி	அமாவாஸ்யை

ஒவ்வொரு நாளும் சந்திரனை அடுத்து ஒவ்வொரு நக்ஷத்திரம் காணப்படும். அவ்வாறு சந்திரனோடு வரும் நக்ஷத்திரங்கள் இருபத்தேழு. அவற்றைச் சந்திரனுக்கு மனைவியர் என்று கூறுவர்.

அருஞ்சொற் பொருள் :

வானம் - ஆகாயம்.
களங்கம் - குற்றம்; கறுப்பு.
எறிக்கும் - வீசும்.
எண்ணிறந்த - கணக்கில்லாத.
கீற்று வடிவம் - கோடுபோன்ற உருவம்.
குமுதம் - ஆம்பல்.

கேள்விகள் :

1. சந்திர சூரியர் பார்வைக்கு ஒரே அளவில் தோன்றக் காரணம் என்ன?
2. எந்த நாளை அமாவாஸ்யை என்கிறோம்?
3. பிறை என்று எதற்குப் பெயர்?
4. வளர்பிறை, தேய்பிறையைப்பற்றிச் சொல்லு.
5. சந்திரனில் ஒளி குறைந்த பாகம் எவ்வாறு கூறுகின்றனர்?
6. மாதத்திற்குத் திங்கள் என்ற பெயர் வந்தது என்?

18. ஜவஹர்லால் நேரு

இந்தியாவில் உள்ள தேசாபிமானிகளுள் சிறந்தவர் ஜவஹர்லால் நேரு. அவர் காஷ்மீர தேசத்துப் பண்டிதர் வம்சத்தைச் சேர்ந்தவர். அம்மரபினர், புலமை மிக்க பண்டிதர்கள்; நாட்டிற்கு உழைக்கும் உத்தமர்கள். மகம்மதியர் காஷ்மீர நாட்டின்மீது படை யெடுத்தபொழுது, அம்மரபினருட் சிலர் ஹிந்துஸ்தானத்தின் உட்பாகத்தில் வந்து குடியேறினர்.

18. ஜவஹர்லால் நேரு

ஜவஹர்லால் நேரு, 1889 - ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் பதினுன்காம் தேதி, அலகபாத்திலுள்ள மீர்கஞ்சு என்னுமிடத்தில் பிறந்தார். அவர்தந்தையார் மோதிலால் நேரு என்பவர்; தாயார் ஸ்வரூபராணி. மோதிலால் அந்நகர உயர்தர நீதிமன்றத்தில் வக்கீலாக இருந்து புகழ் பெற்றவர்; செல்வத்தில் குபேரனைப்போல விளங்கியவர்; கவர்னர்களோடும் நெருங்கிப் பழகும் பெருமை பெற்றவர். மோதிலால், மேல் நாட்டு நாகரிக முறையைப் பின்பற்றியவர்.

ஜவஹருக்கு வளர்ப்புத்தாய்மாரா யிருந்தவர்கள் ஐரோப்பியத் தாதிமார்களே. அவருக்குக் கல்வி கற்பித்தவரும் ஐரோப்பிய ஆசிரியர்களே. 'புரூக்ஸ்' என்ற பெரியார் அவ்வாசிரியர்களுள் ஒருவர். அவர், ஜவஹர்லாலுக்குக் கீதையைக் கற்பித்தார்; தேசாபிமானத்தை ஊட்டினர்; இந்திய நாட்டின் பெருமையை எடுத்துரைத்தார்.

ஜவஹர்லால், பதினைந்தாம் வயதில், உயர்தரப் படிப்புக்காக, இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார். அங்கு 'ஹாரோ' பள்ளிக்கூடத்தில் மாணவராகச் சேர்ந்தார். அக் கலாசாலையில் கல்வி பயிலுவோர், அரச குமாரர்களும் பிரபுக்கள் புத்திரருமே யாவர். பின்னர், 'கேம்பிரிட்ஜில்' படித்து, எம். ஏ. பட்டம் பெற்றுர். அதன் பின்பு சட்டக் கல்வி பயின்று, 1912 - ஆம் ஆண்டில் பாரிஸ்டராகப் பதிவு செய்துகொண்டு, இந்தியா

வுக்குத் திரும்பினர்; தந்தையாரின்கீழ் அத் தொழிலை நடத்திப் புகழ்பெற்றார்.

1916 - ஆம் வருடத்தில் ஹிந்துஸ்தானத்தில் வாழ்ந்துவந்த பெருஞ்செல்வர் ஒருவருடைய புதல் வியாகிய கமலா என்னுஞ் செல்வியை ஜவஹர் லாலுக்கு மணம்புரிவித்தனர். டில்லியில், அத் திரு மணம் அரச குடும்பத்தில் நடப்பதைப்போல மிக்க சிறப்பாக நிகழ்ந்தது. ஐரோப்பியர்களும் திரு மணத்திற்கு வந்திருந்தனர். மணம் நிகழ்ந்த பின்னர், யாவரும் அலகபாத்திற்குத் திரும்பினர். பல தினங்கள்வரை அவர்மாளிகையில் விருந்து நடைபெற்றுக்கொண்டே இருந்தது.

ஜவஹர்லால், தந்தையைப்போல் மேல்நாட்டு நாகரிகவாழ்க்கைமுறையைப் பின்பற்றிவந்தார். அவர், குதிரை ஏற்றம், நீந்துதல், மலை ஏறுதல் முதலியவற்றில் பயிற்சி யுடையவர். இளமையி லேயே, இயந்திரங்களைக் கண்டால் அவருக்குப் பிடிக்காது. அவர், மின்சார விளக்குக்களை உடைத்துக்கொண் டிருப்பாராம்.

கோகலே, தென் ஆப்பிரிக்காவில் இருந்த இந்தியருக்குப் பொருள் உதவி செய்ய வெளியிட்ட வேண்டுகோளுக்காக, ஜவஹர்லால் சுற்றுப்பிர யாணம் செய்து, 40,000 ரூபா சேர்த்துக்கொடுத் தார். அவர், முதன்முதல் தேசசேவையில் ஈடு பட்டது அப்பொழுதுதான்.

ஜவஹருக்கும் அவர்தந்தைக்கும் கருத்து வேற்றுமை உண்டு. ஆயினும், ஜவஹருக்குத் தந்

றையினிடம் உள்ள பக்தி சிறிதும் குறையவில்லை. ஜவஹர், கட்டுப்பாடு செய்யவும் தலைமை வகிக்கவும் ஆற்றல் வாய்ந்தவர். அரசாங்கத்தார், இரண்டு முறை ஜவஹர்மீது குற்றம் சாட்டி, அவருக்குச் சிறைத்தண்டனை விதித்தனர்.

1922-ம் ஆண்டில் ஜவஹர்லால், அலகபாத் நகர பரிபாலன சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்நகரத்துக்குச் சிறந்த தொண்டு ஆற்றினர்; சுமார் இரண்டரை வருட காலம் அப் பதவியை வகித்துவந்தார்; நூல் நூற்றல், சாரணர் இயக்கம், இங்கிலீஷுக்கு ஈடாக ஹிந்துஸ்தானியைப் பாடசாலையில் கற்பித்தல் முதலியவற்றை ஏற்படுத்தினர். அவரது திறமையைக் கமிஷனர் பலரும் பாராட்டியிருக்கின்றனர்.

ஜவஹர், 1922-ஆம் ஆண்டு முதல் 1927 வரை காங்கிரஸ் சபையின் காரியதரிசியாக இருந்து வந்தார்; 1926-ல் மனைவியோடு ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்தார்; அங்கு ரஷியாவின் அரசியல் முறையே அவர்மனத்தில் வேர் ஊன்றியது.

இந்திய இளைஞருக்கு ஜவஹர்லால் தெய்வம் போல் விளங்கினர். அவர், 1929-ஆம் ஆண்டில் காங்கிரஸுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பின்னர், மஹாத்மா காந்தி உப்புச் சட்டத்தை மீறின காலத்தில், நேரு குடும்பத்தினர்

அனைவரும் அவரைப் பின்பற்றினர். ஜவஹர் ஆறுமாதம் சிறைத் தண்டனை அடைந்தார். பின்னர், காந்தியும் மோதிலாலும் சிறைப்பட்ட னர். அப்பொழுதுதான் மோதிலால் நேரு, தமது ஆனந்தபவனத்துக்குச் 'சுயராஜ்ய பவனம்' என்று பெயரிட்டு, அதனை நாட்டிற்கு அளித்தார்.

அரசாங்கத்தார், நாட்டில் அமைதி நிலவ வேண்டி, 1931-ஆம் ஆண்டு ஜனவரி-மீ 26-உ, காங்கிரஸ் தலைவர்கள் அனைவரையும் விடுதலை செய்தனர். ஆனால், அடுத்த மாதத்தில், மோதிலால் மண்ணுலக வாழ்வை நீத்தார். நாடு முழுவதும் துக்கத்தில் ஆழ்ந்தது. இதைக்குறித்து, ஜவஹர் லால் பின்வருமாறு தம் மகளுக்குக் கடிதம் எழுதி னர்.

'பத்து நாள் இரவும் பகலும், அப்பாவுடன் இருந்து, அவர் எமனோடு போராடியதைக் கண் டேன். ஆயுட் காலத்தில் அவர் பல போரில் ஈடுபட் டிருந்தார்; தோல்வி என்பது அவருக்குத் தெரி யாது. இந்தப் போரில்தான், அவர் தோல்வியுற் றார். நாம் துக்கத்திலேயே மூழ்கியிருக்க அவர் விரும்பமாட்டார். அவரைப்போல நாமும் நாட்டுக் குத் தொண்டுசெய்ய வேண்டும். அவர் எந்தக் கொள்கைக்காகத் தம், உடல் பொருள் ஆவி மூன் றனையும் கொடுத்தாரோ, அதற்கே நாம் உழைக்க வேண்டும். அவசியமாயின் உயிரையும் கொடுக்க வேண்டும்.'

1934-ஆம் வருடத்தில் நேர்ந்த பீஹார் பூகம்பத்தில் ஜவஹர்லால், மண்வெட்டியும் கூடையும் சுமந்து, வேலையாட்களோடு உழைத்தார். தொண்டர் பலர் அவரைப் பின்பற்றி வேலைசெய்தனர். பின்னர், கல்கத்தாவில் ராஜத்துவேஷமாகப் பேசினார் என்று, அவருக்கு, அரசாங்கத்தார் இரண்டாண்டுகள் சிறைத்தண்டனை விதித்தனர். அவர் சிறையில் இருக்கையில், ஐரோப்பாவில் இருந்த அவர்மனைவிக்கு அசௌக்கியம் மிகுந்தது. அதனால், அவரைக் காண்பதற்காக, அரசாங்கத்தார் ஜவஹரை விடுதலை செய்தனர்.

ஜவஹர், மனைவியைப் பார்ப்பதற்காக ஐரோப்பாவுக்குச் சென்றார். அங்கு அவ்வம்மையார், மேலுலகம் அடைந்தார். ஜவஹர் அந்தத் துன்பத்தில் மூழ்கினார். இந்தியாதேசம் முழுவதும் அந்தத் துக்கத்தால் வருந்தியது. ஆயினும், பின்பு ஜவஹர் இந்தியாவிற்கு வந்து, மாந்தரின் விருப்பத்திற்கு இணங்கி, இரண்டாம்முறை காங்கிரஸ் தலைவராய் அமர்ந்தார்.

ஜவஹர்லால்நேரு அஞ்சாத நெஞ்சினர்; தூய வாழ்க்கையினர்; ஏழைகளுக்கு இரங்குபவர்; எதனையும் ஒளிக்காமல் செய்பவர்; தேச கைங்கர்யமே குறியாகக் கொண்டவர். அவரைப்பற்றி மஹாத்மா காந்தி கூறியிருப்பவை வருமாறு:

'தைரியத்தில் ஜவஹர்லாலை எவரும் வெல்ல முடியாது; தேசாபிமானத்தில் யாரும் அவரை

மீறமுடியாது. அவர், ஒரு போர்வீரனின் துணிவையும், சிறந்த ராஜதந்திரியின் அறிவையும் பெற்றிருக்கிருர். ஜவஹர்லால், பளிங்குபோலப் பரிசுத்தமான குணம் உள்ளவர்; சந்தேகத்திற்கு இடமில்லாத உண்மையாளர்; குற்றங் குறை கூற முடியாத வீரர். அவரிடம் தேசத்தை ஒப்புவிப்பது பத்திரமானதே'.

இத்தகைய பெரியாராகிய நம் ஜவஹர்லால் நேரு, பல்லாண்டு வாழ்ந்து, நமது தேசத்தை உயர்நிலைக்குக் கொண்டுவருமாறு அருள்புரியும்படி, நாம் இறைவனை இறைஞ்சி வழுத்துவோமாக.

அருஞ்சொற் பொருள் :

ஈடு - பதல்.
ஆவி - உயிர்.
குறி - லக்ஷ்யம், இலக்கு.
கைங்கர்யம் - ஊழியம், தொண்டு.

கேள்விகள் :

1. ஜவஹர்லால் முதன்முதல் தேசசேவையில் ஈடுபட்டது எப்பொழுது?
2. அவர் அலகபாத் நகரபரிபாலன சபைத்தலைவராயிருந்தபோது செய்தவை யாவை?
3. ஜவஹர்லால் நேருவின் குணங்களைக் குறித்து, மஹாத்மா காந்தி கூறியிருப்பவை என்ன?

புலியால் பிராமணன் மரண மடைந்த கதை

1. மூப்புடைப் புலிதான் ஒன்று
மூழ்கிஓர் ஏரி யின்கீழ்க்
காப்புடன் தருப்பை தன்னைக்
கையில்வைத் திருக்கும் போது
நாப்புடை மறைவ லாளன்
நண்ணியவ் வழியிற் செல்லக்
கூப்பிடல் செய்தன் னேனைக்
குறித்தந்தப் புலிதான் கூறும்.

2. அந்தணா இந்தக் காப்பை
அளிப்பன்நீ வாஎன் றோதச்
சிந்தையில் வேட்கை கூர்ந்து
செப்புவான் புலியா ரேநீர்
வெந்துயர்க் கொலைமாந் தர்க்கு
விளைப்பது விட்டுத் தானம்
எந்தநல் வழியிற் செய்வீர்
எனக்கதைக் கூறு கென்றான்.

3. புலியது கேட்டு நானே
பூசுரா நகமும் பல்லும்
இலன்கிழம் ஆனேன் பாவம்
இழைப்பது விடுத்து நாளும்
பொலிதரு தானஞ் செய்கை
பொருளெனக் கொண்டேன் அஞ்சேல்
சலமதில் மூழ்கி வந்து
தருமிதைக் கொடுபோ என்ன.

4. நன்றென மறையோன் மூழ்க
நண்ணினன் ஏரி நீரில்
அன்றவன் கால்கள் சேற்றில்
அழுந்திடத் திகைத்து நின்றான்
சென்றது புலிநான் உன்னைச்
சேற்றினின் றெடுப்பேன் என்னக்
கொன்றது குருதி தன்னைக்
குடித்ததென் றுரைத்த தன்றே.

குறுமுயல் சிங்கத்தைக் கொன்றது

1. குறுமுயல் சிங்கந் தன்னைக்
கொன்றதுண் டதனைச் சொல்வேன்
செறியும்ஓர் காட்டி லேஓர்
சிங்கமுண் டந்தக் காட்டில்
உறுவிலங் கனைத்தும் வேட்டை
யாடிஊன் மிகவும் தின்று
வெறிகொடு திரியும் நாளில்
விலங்கெலாம் ஒருங்கு கூடி.

2. ஆணிளஞ் சிங்கமே உன்
அடவியில் விலங்கை யெல்லாம்
வீணிலே கொல்ல வேண்டா
விதத்தினில் தினம்ஒன் றாக
ஊணுனக் களிப்போம் என்ன
உண்மையாக் கொண்டு சிங்கம்
ஆணையும் இட்டொவ் வொன்றாய்
அருந்திஅங் கிருக்கும் நாளில்.

3. தனிமுயல் ஒன்றுக் கோர்நாள்
தன்முறை வருத லோடும்
இனிஅது விடாது நம்மை
எனினும்ஓர் எடுப்பெ டுத்து
வினையைஇப் போது செய்து
வென்றுநாம் உய்ந்தோ மாகில்
நனிவிலங் கனைத்தும் உய்யும்
நமக்கும்நற் புகழ்உண் டென்றே.

4. கருதிஅச் சிங்கத் தின்தன்
கடும்பசி வேளை தப்பி
வருதலும் முயலை நோக்கி
மன்னன்என் பசிவே ளைக்குப்
பெருமத வேழ மேனும்
பிந்துவ தில்லை பிந்தி
வருவதென் உரை நீ என்று
மனந்தனில் சினந்து கூற.

5. ஐயஉன் பசிவே ளைக்கு
அடியனேன் வந்தேன் அங்கோர்
வெய்ய சிங் கத்தைக் கண்டு
வெருவிஅங் கொளித் திருந்தேன்
பையவே சிங்கம் ஆங்கோர்
பருமுழை புகுந்த பின்னர்
துய்யஉன் பக்கல் வந்தேன்
சுவாமிஎன் றிறைஞ்சி நிற்க.

6. சிங்கம்நாம் அல்லால் வேறோர்
சிங்கமும் கண்டா யாகில்
அங்கதைக் காட்ட வா என்
றழைத்தலும் அழைத்துப் போய் ஓர்
பங்கமும் புனலும் சேர்ந்த
பாழ்ந்துர வதனைக் காட்ட
அங்கதை எட்டிப் பார்க்க
அதனில்தன் உருவம் தோன்ற.

7. தன்உரு நிழலைத் தானே
சத்துரு என்று பாய்ந்து
துன்னுபங் கத்த ழுந்தித்
துளங்கியே செத்த தன்றோ
மன்னிய பகையா னாலும்
மதியினால் வெல்ல லாகும்
என்னுமோர் அரிய நீதி
இக்கதை விளக்கு மன்றே.

குமரேச சதகம்

சிறுமையாற் பெருமை

சேற்றிற் பிறந்திடுங் கமலமலர் கடவுளது
திருமுடியின் மேலிருக்கும்
சிகழ்சிப்பி யுடலிற் சனித்தமுத் தரசரது
தேகத்தின் மேலிருக்கும்

போற்றியிடு பூச்சியின் வாயினுல் பட்டென்று
பூசைக்கு நேச மாகும்
புகலரிய வண்டெச்சி லானதேன் தேவர்கொள்
புனிதஅபி டேக மாகும்
சாற்றிய புலாலொடு பிறந்தகோ ரோசனை
சவாதுபுழு கனைவர்க் குமாம்
சாதியீ னத்திற் பிறக்கினும் கற்றோர்கள்
சபையின்மேல் வட்ட மன்றோ
மாற்றிச் சுரத்தினை விபூதியால் உடல்குளிர
வைத்தமெய்ஞ் ஞான முதலே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

அறப்பளீசுர சதகம்

இதற்கு இது வேண்டும் எனல்

தனக்குவெகு புத்தியுண் டாயினும் வேறொருவர்
தம்புத்தி கேட்க வேண்டும்
தானதிக சூரனே யாயினுங் கூடவே
தளசேக ரங்கள் வேண்டும்
கனக்கின்ற வித்துவா னாயினுந் தன்னினுங்
கற்றோரை நத்த வேண்டும்
காசினியை யொருகுடையி லாண்டாலும் வாசலிற்
கருத்துள்ள மந்த்ரி வேண்டும்

தொனிக்கின்ற சங்கீத சாமர்த்திய ஞகிலும்
சுதிகூட்ட வொருவன் வேண்டும்
சுடர்விளக் காயினும் நன்ருய் விளங்கிடத்
தூண்டுகோ லொன்று வேண்டும்
அனற்கண்ண னேபடிக சங்கநிகர் வண்ணனே
ஐயனே அருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்ப ளீசுர தேவனே.

திருவேங்கட சதகம்

இவை வேண்டாம் எனல்

பெற்றதாய் தந்தைதன் சுற்றமே முதலான
பெரியோரை முனிதல் வேண்டாம்
பின்னென்று முன்னென்று பேசியே அவமானப்
பேர்கொண்டு திரிதல் வேண்டாம்
உற்றவர்கள் போலஉட் பகையான வஞ்சகரை
ஒருநாளும் நம்ப வேண்டாம்
ஒருவருக் கிச்சையாய்ப் பொய்சொல்லிப் பின்
ஊமைபோல் நிற்றல் வேண்டாம் [சபையில்
சற்றுமே பொறுமையில் லாதவர்கள் சண்டை
தான்போய் விலக்கல் வேண்டாம் [யைத்
தைரியந் தனில்விக்ர மாதித்தன் என்னிலும்
தன்னையே புகழ வேண்டாம்

மற்றொன்றும் எண்ணாது செய்யவேண் டாம்என்
மணவாள நாரா யணன் [பர்
மனதிலுறை அலர்மேலு மங்கைமண வாளனே
வரத வேங்கட ராயனே.

ஔவையார் அருளிச்செய்த

வாக்குண்டாம்

நன்றி யொருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா — நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால். (1)

நல்லா ரொருவர்க்குச் செய்த வுபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே — அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த வுபகாரம்
நீர்மே லெழுத்திற்கு நேர். (2)

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்ப துவும்நன்றே — நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே அவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று. (3)

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லா ரொருவர் உளரேல் அவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யும் மழை. (4)

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சபைநடுவே
நீட்டோலை வாசியான் நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம். (5)

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி. (6)

அடக்க முடையார் அறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா—மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாம் கொக்கு. (7)

சீரியர் கெட்டாலும் சீரியரே சீரியர்மற்
றல்லாதார் கெட்டாலங் கென்னாகும்—சீரிய
பொன்னின் குடமுடைந்தால் பொன்னாகும் என்னாகும்
மண்ணின் குடமுடைந்தக் கால். (8)

நற்றா மரைக்கயத்தில் நல்லன்னஞ் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம். (9)

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்-மன்னற்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிடம் எல்லாஞ் சிறப்பு. (10)

நீதி வெண்பா

கற்ருேர் கனமறிவர் கற்ருேரே கற்றறியா
மற்ருேர் அறியார் வருத்தமுறப் — பெற்றறியா
வந்தி பரிவாய் மகவைப் பெறுந்துயரம்
நொந்தறிகு வாளோ நுவல். (1)

ஈக்கு விடந்தலையில் எய்தும்இருந் தேளுக்கு
வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே — நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்
கங்கமுழு தும்விடமே யாம். (2)

கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி. (3)

கற்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கற்பூர மாமோ கடலுப்பு — பொற்பூரும்
புண்ணியரைப் போல இருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ புகல். (4)

பொறப்பறிவில் லாதபல புத்திரரைப் பேறலினேர்
நற்புதல்வ னைப்பெறுதல் நன்ருமே — பொற்கொ
பன்றிபல குட்டி பயந்ததனுல் ஏதுபயன் [டியே
ஒன்றமையா தோகரிக்கன் ருேது. (5)

தாமுங்கொ டார்கொடுப்போர் தம்மையுமீ யாதவ
சேமஞ்செய் வாருஞ் சிலருண்டே — எமநிழல் [கை
இட்டுமலர் காய்கனிகள் ஈந்துதவும் நன்மரத்தைக்
கட்டுமுடை முள்ளெனவே காண். (6)

தீயவர்பாற் கல்வி சிறந்தாலும் மற்றவரைத்
தூயவரென் றெண்ணியே துன்னற்க—சேயிழையே
தண்ணொளிய மாணிக்கஞ் சர்ப்பம் தரித்தாலும்
நண்ணுவரோ மற்றதனை நாடு. (7)

பாலினீர் தீயணுகப் பால்வெகுண்டு தீப்புகுந்து
மேலுநீர் கண்டமையும் மேன்மைபோல்—நூலினெறி
உற்றோர் இடுக்கண் உயிர்கொடுத்தும் மாற்றுவரே
மற்றோர் புகல மதித்து. (8)

நிந்தையிலாத் தூயவரும் நிந்தையரைச் சேரிலவர்
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே — நிந்தைமிகு
தாலநிழற் கீழிருந்தான் தன்பால் அருந்திடினும்
பாலதெனச் சொல்லுவரோ பார். (9)

வாக்குநயத் தாலன்றிக் கற்றவரை மற்றவரை
ஆக்கைநயத் தாலறிய லாகாதே—காக்கையொடு
நிலச் சிறுகுயிலை நீடிசையா லன்றியே
கோலத் தறிவருமோ கூறு. (10)

எல்லோர் தமக்கும் இனிதுதவ லன்றியே
நல்லோர் தமக்குதவி நாடாரே — வல்லதரு
நாமநிதி மேகம் நயந்துதவ லன்றியே
தாமுதவி நாடுமோ சாற்று. (11)

கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழினும்நூல்
வல்லான் ஒருவனையே மானுவரோ — அல்லாரும்
எண்ணிலா வான்மீன் இலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா ஆமோ விளம்பு. (12)